

# அறிவொளி ஆசிரியர் கையேடு

T13023
R003L07

## தீபம் 1

அறிவொளி இயக்கம், தஞ்சாவூர் மாவட்டம்.

# அறிவொளி
# ஆசிரியர் கையேடு

(கற்பிக்கும் தொண்டர்களுக்கான வழிகாட்டி)

## தீபம் -1


**கையேடு தயாரிப்பு உதவி**

முனைவர். கு. அண்ணாதுரை

புலவர். ந. குருசாமி

புலவர். கரு. அரங்கராசன்

ஓவியம் : கீர்த்தி மோகன்



மாவட்டக் கல்விக்குழு

**தஞ்சாவூர் மாவட்ட அறிவொளி இயக்கம்,**

**தஞ்சாவூர்.**

# அணிந்துரை

கற்பது கற்பிப்பது - இவை இரண்டிற்கும் ஓர் இடைவெளி இருப்பது என்னவோ உண்மை. இந்த இடைவெளியில்தான் நமது கல்விச் சாலைகள், கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் வரிசையாக நின்று, தொடராக இணைந்து இரண்டையும் இணைக்கிறது. இந்தியாவில் 8 இலட்சம் கல்வி நிறுவனங்கள்! இவை இரண்டையும் இணைக்கும் பாலங்கள் அவை. மேலும் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் உள்ள வேற்றுமையையும் தெரிதல் வேண்டும். கற்பதற்கு ஆர்வம் மற்றும் மன எழுச்சி வேண்டும். கற்பிப்பதற்கோ திட்டமும் தீவிரமும் வேண்டும். ஒரு மரத்தை வெட்ட எட்டுமணி நேரம் அனுமதிக்கப்பட்டால் ஆறு மணி நேரத்தை கருவியினை கூர்மையாக்க செலவழிப்பது என்பதே அறிவார்ந்த திட்டம். மழுங்கிய கோடாறி நேரத்தையும் உழைப்பையும் பாழாக்கவே உதவும். கற்பிக்க ஓர் அணுகுமுறை தேவை. இந்த கையேடு அந்த அணுகுமுறையை தெளிவாக்கி எளிதாக்கி ஆசிரியர் கையேடாக மிளிர்கிறது. கற்பிப்போர் அணிக்கு இது ஒரு திட்ட நூல். பயிற்றுவிக்கிற செயல்முறைகளைத் திரட்டித் திட்டமாகத் தருகிறது. தன்னார்வத் தொண்டர்கள் இந்த கையேட்டினை நன்கு பயன்படுத்த வேண்டும். ஆர்வத்தோடு கற்க வருபவர்களை தங்களது பொறுப்பு கரங்களால் பிணைத்தும் இதயத்தில் அமர்த்தியும், கற்போரின் சுவாச நுரையீரல்களாக மாறவேண்டும். வேறென்ன? இது தான் தன்னார்வம்!

இனியென்ன? இதனை வளர்க்க, விரிவாக்க, உயர்த்தப் புறப்படுவோம்.

நன்றி.

**இ. வேங்கடாசலம்**, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்.

## அறிவொளியின் ஆசிரியரே...

**உங்களுக்கு எங்கள் -**

வீர வணக்கம்! வீர வணக்கம்!
வீர வணக்கம்! வீர வணக்கம்!
கற்றுக் கொடுக்க முன்வந்துள்ள
அறிவொளியின் தொண்டனுக்கு
வீர வணக்கம்! வீர வணக்கம்!
கல்லாமையை அகற்றவந்த
கலைமகளின் தூதருக்கு
வீர வணக்கம்! வீரவணக்கம்!

* காசுதேடும் உலகினிலே
கருணையோடு வந்தவரே!
படிப்பறிவில்லா மக்கள் மீது
பாசம் கொண்டு வந்தவரே!
சகமனிதரைப் படிக்க வைக்க
சபதம் பூண்டு வந்தவரே!
அறியாமை இருளகற்ற
ஒளி சுமந்து வந்தவரே!
வீர வணக்கம்! வீர வணக்கம்!

* வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!
மனதார வாழ்த்துகிறோம்!
எழுத்தறிவு தீபம்கொண்டு
எழுந்துவந்த தொண்டர் படையே!
சூட்டுகிறோம்! சூட்டுகிறோம்!
புகழ்மாலை சூட்டுகிறோம்.
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!

* ஈடாகாது ஈடாகாது
எழுத்தறிவிக்கும் இந்தப் பணிக்கு
எந்தப் பணியும் ஈடாகாது
அறிவொளி இயக்கத்தின் இதயங்களே!
ஆசிரியத் திலகங்களே!
அவனியிலே உமக்கிணையாக
ஒருவருமே கிடையாது!

* 'படித்த பாரதம்' என்ற கனவு

பாரதியின் கனவாகும்
பாரதிதாசனின் கனவாகும்
கனவுகளை நனவாக்க
கடமையேற்று வந்தவரே!
வாழ்த்துகிறோம் வாழ்த்துகிறோம்!
மனதார வாழ்த்துகிறோம்.
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
மறக்க மாட்டோம் மறக்க மாட்டோம்
கல்விப் பணி ஆற்ற வந்த
கடமை வீரரை மறக்க மாட்டோம்.
சூரிய சந்திரர் சாட்சியாக
மறக்க மாட்டோம்; மறக்க மாட்டோம்
புனிதப் போர் புனிதப் போர்!
இதோ ஒரு சுதந்திரப் போர்!
கல்லாமை நமது எதிரியாகும்!
கல்வி நம் ஆயுதமாகும்!
புனிதப் போர் புனிதப் போர்!
தேசத்தின் புனிதப் போர்!
தியாகத்தின் புனிதப் போர்!
புனிதப் போரில் பங்கேற்க
புறப்பட்டு வந்த வீரரே!
எழுத்தறிவுதீபம் ஏந்தி வந்த
இளைஞர்களே! யுவதிகளே!
வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!
மனதார வாழ்த்துகிறோம்!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!

## இது ஒரு வாய்ப்பு ...
## இது ஒரு சந்தோஷம் ...

எண்ணற்ற உறவுகள் - ஏற்கனவே! சில இனிமையானவை. சில தொல்லையானவை.

இந்த நேரத்தில் ஒரு புதிய உறவு வந்து வீட்டுக் கதவைத் தட்டியது.

மெல்லத் தயக்கத்தோடு கதவைத் திறந்து பார்த்தால் ..

அறிவொளி!

முதலில் அறிவொளி பற்றி விசாரித்தீர்கள், பிறகு அறிவொளியில் பங்கு பெற்றீர்கள்,
இப்போது அறிவொளியின் அங்கம் ஆகிவிட்டீர்கள்.

இடுப்பை விட்டு இறங்காத குழந்தை போல அறிவொளி இப்போது உங்களோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. இனி, அறிவொளி உங்களை விடாது; அறிவொளியை உங்களாலும் விடமுடியாது.

கவிஞர்கள் பாடுவார்களே,

பிரித்தாலும் பிரித்தாலும்

பிரியாதே நேசம் - எம்மைப்

பிளந்தாலும் பிளந்தாலும்

போகாதே பாசம்

என்று. அது போன்றது அறிவொளி உறவு. இன்று நமது மாவட்டம் முழுவதும் ஓர் அறிவொளிக் குடும்பம் ஆகியிருக்கிறது. நான் ... நீங்கள் ... அவர் ... யாரைக் கேட்டாலும் அறிவொளி! நம்முடைய கனவிலும் இப்போது அறிவொளி!

அறிவொளியில் ஒவ்வொருவருக்கும் ஒரு பணி இருக்கிறது. ஒவ்வொன்றும் முக்கியமானது.

இருப்பினும் 'எழுத்தறிவிக்கும் உங்கள் பணிக்கு' எதுவும் ஈடாகாது.

உங்களில் சிலர் ஏற்கனவே ஆசிரியர்களாயிருக்கலாம். ஆனால் பலர் பள்ளி கல்லூரிகளில் தற்போது படிக்கின்ற மாணவர். தற்போது தான் படிப்பை முடித்திருக்கும் மாணவர், வேலை தேடும் இளைஞர், யுவதிகள், மற்றும் குடும்பப் பெண்மணிகள்.

உங்களில் பலருக்கு எழுத்தறிவிக்கும் ஆசிரியப் பணி புதிய அனுபவம். இருப்பினும் இது சிரமமான பணியல்ல.

அறிவொளி என்பது அபூர்வத் திறமைகள் கொண்டோரின் இயக்கமல்ல. இது மக்கள் இயக்கம். சிரத்தையுணர்வும், மனித நேயமும் கொண்ட எளிய மக்களின் இயக்கம்.

மகாகவி தாகூர் சொல்வார்.

'பிரம்மாண்டமான காரியங்கள் எல்லாம் எளிய மனிதர்களால்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன'

சமூக சிந்தனையுள்ள உங்களுக்கு முடியாத காரியம் எதுவுமில்லை.

நம்பிக்கையுடன் ஆசிரியப் பணியைத் துவக்குங்கள். வெற்றி உங்களுக்கே!

மக்கள் படிக்க வருவார்களா? என்றொரு கேள்வி உங்கள் முன் வரலாம்.

சந்தேகம் வேண்டாம். மக்கள் அவசியம் வருவார்கள். ஊதியமின்றி, தன்னார்வத்துடன் நீங்கள் கற்பிப்பது அறிந்து அவர்கள் மனம் நெகிழ்ந்து வருவார்கள். உங்களுக்காகவே அவர்கள் படிக்க வருவார்கள்.

எழுத்தறிவுப் பணி ஒருபோதும் உங்களுக்குக் கூடுதல் சுமையாக இருக்காது.

உண்மையில் உங்களுக்கு இது ஒரு புதிய வாய்ப்பு, ஒரு புதிய சந்தோஷம்.

ஊரெல்லாம் கூடிச் செய்யும் ஆக்கப் பூர்வமான காரியத்தில் உங்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறதே!

இதை எளிதில் மறக்கமுடியுமா? எத்தனை வருஷங்களானாலும் மறக்க முடியுமா? சரி!

புறப்படுங்கள்!

பாடம் கற்க உங்களுக்காகப் பத்துப் பேர் காத்திருக்கிறார்கள்.

## பொதுவாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை...

பகுதி 1

## வழிகாட்டிக்கு ஒரு வழிகாட்டி...

★ பத்துப் பேருக்கு எண்ணறிவும், எழுத்தறிவும், விழிப்புணர்வும் கற்பித்து அவர்களுக்கு வழிகாட்ட வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வழிகாட்டுவதற்கு இதோ இந்த வழிகாட்டி நூல்!

★ எந்தப் பணியைத் துவங்குவதற்கும் ஆர்வமும், உணர்வுப் பூர்வமான ஈடுபாடும் தான் முதல் தேவை. ஆனால் எடுத்த காரியத்தில் வெற்றிபெற அவை மட்டும் போதா. திட்டமிட்ட செயல்பாடு மிக முக்கியம். எழுத்தறிவுப் பணியைத் திட்டமிட்டுச் செய்ய இவ் வழிகாட்டி நூல் உங்களுக்கு உதவுகிறது.

★ வழிகாட்டி சொல்லும் வழியிலேயே நீங்கள் சென்றால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். உங்களுடைய கற்பனைத்திறனும், தனித்துவமான ஆற்றல்களும் வழிகாட்டியின் வழியிலேயே செல்வதன்மூலம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

★ வழிகாட்டியை வரிவிடாமல் படியுங்கள். ஒவ்வொரு நாள் வகுப்பிற்குப் போகுமுன்னும் வழிகாட்டியை வாசித்துவிட்டுப் செல்லுங்கள். பணமுள்ள பர்ஸைப் போல வழிகாட்டியைப் பத்திரமாக வைத்திருங்கள்.

★ இவ்வாறு நாங்கள் சொல்வதற்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. 32,000 அறிவொளித் தொண்டர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபடுவர். 32,000 அறிவொளி மையங்களும் ஒரே சீரான வேகத்தில் செல்வது அறிவொளி இயக்க வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும்.

★ அறிவொளியின் ஆசிரியரே! பெருமைக்குரிய வழிகாட்டியே! நீங்க அறிவொளியின் நண்பன். வழிகாட்டி உங்கள் நண்பன்.

★ உங்கள் பணி வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

## அறிவொளித் திட்டம்

★ 1995 க்குள் நாட்டில் உள்ள அனைவரும் எழுத்தறிவு பெற வேண்டும் என்ற குறிக்கோளை எட்ட மத்திய அரசின் தேசிய எழுத்தறிவு முனையத்தால் **(National Literacy Mission)** தொடங்கப்பட்ட திட்டம் - அறிவொளித் திட்டம்.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 9 - 45 வயதுடைய 3,19,000 எழுத்தறிவற்றோருக்கு எழுத்தறிவு கற்பிக்கும் திட்டம் அறிவொளித் திட்டம்.

★ அறிவொளித்திட்டம் மக்கள் திட்டம். மத்திய, மாநில அரசுகளின் ஆதரவில் நடைபெறுகிறது. 2:1 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகள் நிதி உதவி வழங்குகின்றன.

★ கற்போர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 60 முதல் 65 வரை செலவு செய்யும் விதத்தில் அரசுகள் நிதி அளிக்கின்றன. இந்நிதியில் பெரும்பங்கு கற்போருக்கான புத்தகங்கள், நோட்டுகள், பென்சில், கரும்பலகைகள் - வாங்குவதற்கும், கலைப் பயிற்சி, கலைப் பயணம், ஊழியர் பயிற்சி ஆகியவற்றுக்கும் செலவிடப் படுகிறது.

★ அறிவொளித் திட்டத்தின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார்.

★ பிரச்சார அணுகுமுறை **(Campaign approach)** இத்திட்டத்தின் சிறப்பம்சம். பிரச்சார அணுகுமுறை என்பது கலைநிகழ்ச்சி போன்ற மக்களைத் தொடும் பிரச்சார சாதனங்களின் மூலம் மக்களை அணுகி, அறிவொளி இயக்கத்தைத் தங்கள் இயக்கம் என மக்கள் உணர்வுப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளச் செய்தல்.

★ திட்டம் வெற்றி பெற அனைத்துப் பகுதி மக்களையும் இணைத்துச் செயல்படுத்த அறிவொளித் திட்டத்தில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

★ கற்போர் ஆர்வத்துடன் கற்பதற்கேற்ப புதிய பாடத்திட்டம் அறிவொளியின் சிறப்பம்சம். கலந்துரையாடல் முறையில் கற்போரும் பங்கேற்கும் விதத்தில் பாடம் நடத்தப்படுகிறது.

★ பாடங்களைக் கற்பிக்கும் தொண்டர்களுக்கு முறையான பயிற்சி (மூன்று முறை) அளிக்கப்படுகிறது.

★ அறிவொளித் திட்டம் ஓராண்டுகள் நடத்தி முடிக்கப்படும் திட்டம். மூன்று கட்டங்களை உடையது. முதல் கட்டம் - பிரச்சாரம், இரண்டாம் கட்டம் - கற்பித்தல்,
மூன்றாம் கட்டம் - மதிப்பிடலும், தொடர் முயற்சிகளைத் திட்டமிடலும்.

★ பிரச்சாரம் என்பது கற்பதற்கு எழுத்தறிவுச் சூழலை உருவாக்குதல், அதாவது எழுத்தறிவற்றோர், கற்பிக்கும் தொண்டர் இருசாராருக்கும் ஆர்வமூட்டி இருசாராரும் விருப்பத்துடன் திட்டத்தில் பங்கேற்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல். இது முதல் நான்கு மாத காலம் நடைபெறும்.

★ கற்பித்தல் ஆறுமாத காலம் நடைபெறும். தொண்டுமனப்பான்மை உடைய படித்தவர். எவ்வித ஊதிய எதிர்பார்ப்பும் இன்றி 10 பேருக்கு எழுத்தறிவுக் கல்வி, எண்ணறிவுக் கல்வி, விழிப்புணர்வுக் கல்வி ஆகியவற்றைக் கற்றுத் தருகிறார். தொண்டர், தமக்கும், கற்போருக்கும் உகந்த ஓய்வான நேரங்களில் பாடம் கற்பிக்கலாம். தினம் 1.30 முதல் 2.00 மணி நேரம் வரை வகுப்பு நடைபெறுகிறது. மூன்று புத்தகங்கள் நடத்தி முடிக்கப்படுகின்றன.

★ திட்டம் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படுகிறது. எதிர்பார்த்த வெற்றி கிடைக்காத இடங்களில் முயற்சி தீவிரப்படுத்தப்படுகிறது.

★ கற்பித்தல் முடிந்ததும் கிடைத்த பலன்களைத் தொகுத்து, மதிப்பீடு செய்யும் பணி தீவிரமாக நடைபெறும். கற்போர்கள் தாங்கள் படித்ததை மறந்து விடாதபடியும், எழுத்தறிவோடு அவர்களுக்குத் தொடர்பு இருக்கும்படியும் எழுத்தறிவுப் பின் முயற்சிகள் **(Post-Literacy Programmes)** மேற்கொள்ளப்படும்.

## திட்ட முடிவில் கற்போரிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோம்?

★ நிமிடத்திற்கு 30 வார்த்தைகள் படிக்க வேண்டும். நிமிடத்திற்கு 35 வார்த்தைகள் மனதிற்குள் வாசிக்க வேண்டும். சாலைக் குறியீடு, அறிவிப்புகள், சுவரொட்டிகள், நாளிதழ்களில் பெரிய எழுத்துக்களில் அமைந்த பகுதி ஆகியவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

★ நிமிடத்திற்கு 7 வார்த்தை பார்த்து எழுத வேண்டும். நிமிடத்திற்கு 5 வார்த்தை சொல்லச் சொல்ல (டிக்டேசன்) எழுத வேண்டும். சிறிய கடிதங்கள், விண்ணப்பங்கள், பணவிடைத் தாள்கள், வங்கி பாரங்கள் ஆகியவற்றைப் பூர்த்தி செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.

★ ஒன்று முதல் நூறு வரை படிக்க, எழுதத் தெரிந்திருக்க வேண்டும். மூன்றிலக்கக் கூட்டல், கழித்தல், இரண்டிலக்கப் பெருக்கல், வகுத்தல் கணக்குகள் போடத் தெரிந்திருக்க வேண்டும். அன்றாட வரவு, செலவு கணக்கு, நிறுத்தல், அளத்தல், காலம், தூரம் அறிதல், வட்டிக் கணக்கு ஆகியவை போடத் தெரிந்திருக்க வேண்டும்.

## மக்கள் இயக்கம் என்றால் என்ன?

★ அறிவொளி இயக்கம் மக்கள் இயக்கம் என்கிறோம். அது சரி, மக்கள் இயக்கம் என்றால் என்ன? மக்கள் இயக்கம் என்றால் அது "கூட்டு முயற்சி" என்று பொருள்படும்.

★ ஏதாவது ஒரு மனிதரோ, ஒரு குழுவோ, ஒரு துறையோ ஒரு திட்டத்தை மேற்கொள்ள மக்கள் அதில் எவ்வித அக்கறையோ, ஈடுபாடோ காட்டாமல் ஒதுங்கி நிற்பதால்தான் பல திட்டங்கள் தோல்வியடைகின்றன.

★ அறிவொளி இயக்கத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் முன்வந்து பங்கேற்கிறார்கள். எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் வந்து பங்கேற்கிறார்கள். அறிவொளி இயக்கத்தில் உணர்வுப் பூர்வமாகத் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். பஸ்ஸிலோ, வீதியிலோ, கடையில் பொருள் வாங்கும்போதோ யாராவது ஒருவர் அறிவொளி என்று சொல்லக் கேட்டதுமே ஓ அறிவொளியா! நானும் அறிவொளிதான் என்று கூறிச் சொந்தக்காரர்களைப் போல அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

★ அறிவொளி இயக்கத்தில் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு விதத்தில் பங்கேற்கிறார். உடல் உழைப்பையோ, மூளை உழைப்பையோ தர முடியாத முதியவர் பலர் தங்கள் வீட்டுத் திண்ணைகளை அறிவொளி மையங்கள் ஏற்படுத்திக் கொள்ளத் தந்து அறிவொளி இயக்கத்தில் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள்.

★ இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதானால்...

நம்மாவட்டத்தில் அறிவொளி கிராம, அறிவொளி வார்டு கமிட்டிகள் ஏறக்குறைய 2,000 அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கமிட்டியிலும் 25 பேர் உறுப்பினர் என்று வைத்துப் பார்த்தால் ஏறக்குறைய 50,000 அறிவொளிக் கமிட்டி உறுப்பினர்கள் நம் மாவட்டத்தில் இருக்கிறார்கள்.

★ நிறையப் பேரை ஈடுபடுத்துவதால் மட்டும் இது மக்கள் இயக்கம் ஆகிவிடாது. இயக்கம் என்றாலே உணர்ச்சிப் பூர்வமான பிணைப்பு

இருக்க வேண்டும். அறிவொளி இயக்கத்தில் அத்தகைய பிணைப்பு இருக்கிறது. கலைப் பயணத்தைக் கண்டிருப்பீர்கள். ஒரே நேரத்தில் 16 கலைக்குழுக்கள் புறப்பட்டன. 280க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இக்கலைப்பயணத்தில் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கானோர் கலைப்பயணத்திற்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்து தந்தனர். லட்சக் கணக்கான மக்கள் கலைப் பயணத்தைக் கண்ணுற்றனர். ஒவ்வொருவரும் இது தங்கள் கலைப்பயணம் என உணர்ந்தனர். இப்படி பல்லாயிரக்கணக்கான மக்களை உணர்வுப் பூர்வமாகப் பிணைப்பதால்தான் அறிவொளி இயக்கத்தை மக்கள் இயக்கம் என்கின்றனர்.

★ உங்களையே எடுத்துக் கொள்வோம்.

நீங்கள் தனி நபரா? இல்லை.

அறிவொளி இயக்கம் என்ற கடலின் அலை நீங்கள். அறிவொளி இயக்கம் என்ற மரத்தின் கிளை நாங்கள்.

அறிவொளியை ஒரு மனிதன் என எடுத்துக் கொண்டால் அந்த மனிதனின் இருதயம் நீங்கள்.

## படிக்க வருபவர்களிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

★ தம்மைப் பற்றி உயர்வாகவும், கற்க வந்திருக்கும் முதியோரைப் பற்றித் தாழ்வாகவும் அறிவொளித் தொண்டர் எண்ணிவிடக் கூடாது.

★ எழுத்தறிவற்றவருக்கு அனுபவ அறிவு உண்டு. அதை மதிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மனித நேயமற்ற யந்திர ரீதியான அணுகுமுறை அறிவொளித்திட்டத்தில் பயனளிக்காது. பரஸ்பரம் மதித்தல், பரஸ்பரம் அன்பு செலுத்தல் என்பவை அறிவொளியின் அடிப்படை அம்சங்களாகும்.

★ ஆசிரியருக்கும், கற்போருக்கும் இடையே உள்ள உறவின்சரியான அணுகுமுறை "நம் அறிவைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் இருவரும் சேர்ந்து கற்போம்" என்பதாக இருக்க வேண்டும். இத்திட்டத்தில் கற்போர், ஆசிரியர் இருவரும் கற்கிறார்கள்.

★ இத் திட்டத்தின் மூலம் தனக்கு எந்தவித பணலாபமும் இல்லை என்பதையும், கற்போருக்குத் தான் ஒரு நண்பனே என்பதையும் தொண்டர் விளக்கியாக வேண்டும்.

★ எழுத்தறிவற்றவர்கள் எவ்வாறு மற்றவர்களை நம்பியிருக்க வேண்டியுள்ளது என்பதையும், அவர்கள் எவ்வாறெல்லாம் ஏமாற்றப்படலாம் என்பதையும் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது விழிப்புணர்வுக்கு எவ்வாறு உதவும் என்பதனையும் விளக்க வேண்டும்.

★ கற்பிக்கும்போது மகிழ்ச்சியோடு தோற்றமளிப்பதோடல்லாமல் உண்மையான மகிழ்ச்சியோடு ஈடுபட வேண்டும்.

★ கற்போரின் ஒவ்வொரு சிறு முயற்சியையும் பாராட்டவும், ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

★ இதுவரை படிக்காமல் இருந்தது அவர்களுடைய குற்றமல்ல. வாய்ப்பை இழந்தவர்கள் இப்போது கற்பதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்பதை அவர்களுக்குக் கூற வேண்டும்.

★ கற்போருக்குப் பொய்யான வாக்குறுதிகளைத் தரக்கூடாது. படித்தால் அவர்களுக்கு வேலை, பணம், பரிசு கிடைக்கும் என்றெல்லாம் கூறக்கூடாது. அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிய எழுத்தறிவு அவசியம் என்பதனை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். இதற்கு நேரம் அதிகம் எடுத்துக் கொண்டாலும் பொய் சொல்லுவதை விட அவ்வாறு விளக்குவதே சரியான வழியாகும்.

## கற்போரை மையத்திற்குத் தொடர்ந்து வரவழைப்பது எப்படி?

● பள்ளிக் கூடங்களுக்கு மாணவர்கள் வருவது போல, அறிவொளி மையங்களுக்குக் கற்போர் வருவது தொடர்ச்சியான காரியமாக இருக்காது. பல்வேறு பணிகள், குடும்பப் பிரச்சினைகளுக்கிடையே கற்போர் மையங்களுக்கு வருகிறார்கள். எழுதத் தெரியாத அல்லது கோணல் மாணலாக எழுதுகிற கற்போரைப் பார்த்துத் தொண்டர் சிரிக்கும் ஒரு பரிகாசச் சிரிப்பு போதும் - கற்போர் மையத்திற்கு வருவதை நிறுத்தி விடுவார். வயது வந்தோருக்குக் கற்பிப்பது கல்விப் பிரச்சினை மட்டுமல்ல. மிக முக்கியமான மனித உறவுப் பிரச்சினையும் ஆகும். எனவே கற்போரைத் தொடர்ந்து மையத்திற்குக் கொண்டு வருவதில் மிகுந்த கவனம் வேண்டும்.

● கற்போரை அவர்களின் நிலையிலேயே தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுகாதாரம், குடிப்பழக்கம் அதன் கேடுகள், கெட்ட பழக்கவழக்கங்கள், சோம்பேறித்தனமாக இருப்பது இவை பற்றியெல்லாம் உரை நிகழ்த்த வேண்டாம். ஒரு வேளை இதைப் பற்றி கற்போர்கள் ஏதாவது கேட்டால், தொண்டர்கள் தங்களுடைய கருத்தை மனந்திறந்து சொல்லலாம். ஆனால், இதைச் செய் இதைச் செய்யக் கூடாது, இப்படி நடந்து கொள்ளக் கூடாது என்றெல்லாம் உபதேசிக்கக் கூடாது.

● கற்போருக்குத் தங்களால் படிக்க முடியுமா என்ற அவநம்பிக்கை நேரும்போது நிச்சயம் முடியும் என்று தொண்டர் நம்பிக்கை அளிக்க

வேண்டும். கற்போரிடம் உள்ள நல்ல அம்சங்களை மனந்திறந்து பாராட்ட வேண்டும். அடிக்கடி கற்போரை ஊக்கப்படுத்த வேண்டும்

- ஒரு குழுவில் உள்ள 10 கற்போரும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் பயிற்சியாளர் அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் பெயர், வயது, தொழில், குடும்பப் பின்னணி, விருப்பு வெறுப்பு, நடத்தை ஆகியவற்றைத் தெரிந்திருக்க வேண்டும்.
- சிலரால் மிக மெதுவாகத்தான் கற்கமுடியும். இவர்கள் பெரும்பாலும் நாளடைவில் வகுப்புக்கு வருவதை நிறுத்திவிடக் கூடும். அப்படிப்பட்டவர்களை வகுப்பு முடிந்த பின்னும் இருக்கச் செய்து கூடுதலாகக் கொஞ்ச நேரம் பாடம் எடுக்க வேண்டும். குறைந்த பட்சம் அவர்கள் மீது கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். முடிந்தால் அவர் குடும்ப உறுப்பினர் யாரையாவது அவருக்கு உதவி செய்யுமாறு கேட்க வேண்டும்.
- சிலரால் வேகமாகக் கற்றுக் கொள்ள முடியும். அப்படிப்பட்டவர்களுக்கு வேறு விதமான பயிற்சிகளைத் தரவேண்டும். இவ்வாறு வேகமாகக் கற்றுக் கொள்பவர்களுக்குத் திட்டம் ஏதும் இல்லையெனில் அவர்களும் நாளடைவில் வகுப்புக்கு வராமல் நின்றுவிடக் கூடும். விவாதம், பாடல்கள் பிற நடவடிக்கைகள் சம்பந்தப் பட்ட குழுக்களில் அவர்களை ஓர் உறுப்பினராகச் சேர்க்கலாம்.
- கேலி செய்வதும் கோபப் படுவதும், தொண்டர்களைப் பொறுத்தவரை மன்னிக்க முடியாதவையாகும். "ஒவ்வோர் அறிவொளி ஆசிரியருக்கும்" பொறுமை என்பது அவசியம் இருந்தாக வேண்டும்.
- கற்போர் மையத்திற்குத் தொடர்ச்சியாக வரவேண்டுமானால், தொண்டர்கள் கற்போருக்குத் தேவையான புதுப்புதுச் செய்திகளை செய்தித்தாள்கள் மூலம் அறிந்து வந்து சொல்ல வேண்டும்.

## கற்போரின் ஈடுபாட்டை எவ்வாறு அதிகரிப்பது?

- அடிக்கடி குழு விவாதம் நடத்துதல், ஊரில், நாட்டில் நடக்கும் செய்திகளைச் சொல்லுதல், கற்போரைப் புதுப் புது வார்த்தைகள், வாக்கியங்கள் எழுதச் சொல்லுதல், வரை படங்கள் பயன்படுத்துதல் (Maps), மாதிரிகள் (Models) விளக்க அட்டைகள் (Charts) பயன்படுத்துதல், கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தல், சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல், சுற்றுலா அழைத்துச் செல்லுதல், கண் சிகிச்சை முகாம், தடுப்பு ஊசி போடுதலுக்கு ஏற்பாடு செய்தல், வங்கி, காவல் நிலையம், அஞ்சலகங்களுக்கு அழைத்துச் செல்லுதல், கற்போரின் குடும்பத்தாரோடு இணைந்து உறவாடுதல் ஆகியவை மூலம் ஈடுபாட்டை அதிகரிக்கலாம்.

## சிறந்த அறிவொளி ஆசிரியராக விளங்க.....

- சரியான நேரத்துக்கு வகுப்புக்குச் சென்று விடுங்கள்.
- கோபம் கொள்ளுதல் கூடாது. விடாமுயற்சி, பொறுமை அவசியம்.
- கற்போர் ஒவ்வொருவரிடத்திலும் தனிக்கவனம் செலுத்துங்கள்.
- தினசரி வகுப்புக்களில் பாடல் பாடுங்கள். பாடும்போது எல்லோரும் கைதட்டிக் கொண்டே பாடுமாறு செய்ய வேண்டும்.
- அன்றைய செய்தித்தாளில் வந்த முக்கிய செய்திகளைக் கூறுங்கள்.
- கட்டாயமாகப் படத்தைப் பற்றிய விவாதத்தை நடத்துங்கள்.
- விவாதத்தில் அனைவரையும் ஈடுபடுத்துங்கள்.
- ஒருவரையே அதிகம் பேச அனுமதியாது அனைவரையும் பேசச் செய்யுங்கள். இது வெட்கத்தைப் போக்கி அவர்களுக்குள்ளே நம்பிக்கையை ஏற்படுத்தும்.
- சென்ற வகுப்பில் படித்த பாடங்களைப் பற்றிக் கூறுங்கள்.
- அன்றைய பாடங்களைத் திட்டப்படி நடத்துங்கள்.
- கற்போரின் வருகையை வருகைப் பதிவேட்டில் குறியுங்கள்.
- திரும்பத் திரும்ப கற்ற எழுத்துக்களைப் படிக்கவும், எழுதவும் பயிற்சி கொடுங்கள். தக்க பயிற்சி இல்லையென்றால் எவ்வளவு வேகமாகக் கற்றார்களோ அவ்வளவு வேகத்தில் மறந்து விடுவார்கள். எனவே, கற்றவற்றை நிலை நிறுத்தத் திரும்பத் திரும்பப் பயிற்சிகள் மிக அவசியம். வேகமாகப் பாடங்களை நடத்தாது போதிய பயிற்சி அளித்து கையேட்டில் கூறிய கால அளவுப்படி பாடங்களை நடத்துங்கள்.
- அடுத்த நாள் வகுப்பைத் திட்டமிடுங்கள்.
- தினசரி டைரி குறிப்பு எழுதுங்கள். அதில் நடத்திய பாடம், கற்போரின் முன்னேற்றம், வகுப்பில் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஆகியவற்றை எழுதுங்கள். இத்திட்டம் வெற்றியடைய புதிய கற்பிக்கும் முறையே காரணம். எனவே, கையேட்டில் கூறியபடி பாடம் நடத்துதல் மிக மிக அவசியம்.
- கரும்பலகையை நன்கு பயன்படுத்துங்கள்.

## அறிவொளி தீபம் பகுதி - 1 நடத்துவதற்கான கால அளவு திட்டம்

| | |
|---|---|
| பாடம் - 1 | 10 நாட்கள் |
| பாடம் - 2 | 8 நாட்கள் |
| பாடம் - 3 | 8 நாட்கள் |

| | |
|---|---|
| மதிப்பீடு - 1 | 2 நாட்கள் |
| பாடம் - 4 | 6 நாட்கள் |
| பாடம் - 5 | 6 நாட்கள் |
| பாடம் - 6 | 6 நாட்கள் |
| மதிப்பீடு - 2 | 2 நாட்கள் |
| பாடம் - 7 | 6 நாட்கள் |
| பாடம் - 8 | 6 நாட்கள் |
| மறுதிருப்பு | 2 நாட்கள் |
| இறுதி மதிப்பீடு | 3 நாட்கள் |
| மொத்தம் | 65 நாட்கள் |

## வகுப்பைத் திட்டமிடல்

1. கற்போர்கள் ஒன்று கூடுதல் மற்றும் கற்போர்களைக் கற்கும் சூழ்நிலைக்குக் கொண்டு வருதல் - 20 நிமிடம்
2. கற்போர்களிடம் கலந்துரையாடல், பொதுவானது (செய்தித்தாள், உள்ளூர் சம்பவம், தனிப்பட்ட முறையிலானது) - 20 நிமிடம்
3. கற்பித்தல் : எழுத்தறிவு, எண்ணறிவு - 45 நிமிடம்
4. விழிப்புணர்ச்சிக் கருத்துக்கள் - பாடம் தொடர்பானது - 20 நிமிடம்
5. விளையாட்டு, பாட்டு, கதை, பழமொழிகள் சொல்லுதல், புதிர் விளையாட்டுகள் - 15 நிமிடம்

## பாடம் நடத்தும் முறை

**அறிவொளி தீபம் - 1. அமைப்பும் நோக்கமும்**

**(தயவு செய்து கவனமாகப் படியுங்கள்)**

❄ 8 பாடங்கள் உள்ளன.

❄ 152 தமிழ் எழுத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில எழுத்துக்கள் குறியீடுகளை மனதில் பதிய வைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த எழுத்துக்களை வாசித்தல் பயிற்சிக்கு மட்டும் வைத்துக் கொண்டால் போதும் எழுத்துப் பயிற்சி தரவேண்டிய அவசியமில்லை.

உதாரணமாக ஆறாம் பாடத்தில் செலவு சேமிப்பு என்ற முக்கிய வார்த்தைகள் அறிமுகப்படுத்தப்படுவதை ஒட்டி 'ெ' 'ே' என்ற குறியீடுகள் அறிமுகம் ஆகின்றன.

தீபம் 1-34 ஆம் பக்கம் பாருங்கள்

'ெ' 'ே' இக் குறியீடுகளைப் பதியவைக்க அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்துகளில் லெ, னெ, ரெ, ரே, ளெ, ளே, ணெ, ணே, என்ற எழுத்துகளுக்கு நாம் அழுத்தம் தர வேண்டியதில்லை. இவ்வெழுத்துகள் அடிக்கடி பயன்படுவதில்லை. ணெ - வெண்ணெய், ளெ - வெள்ளெலி இப்படிச் சில இடங்களில் மட்டுமே இவ்வெழுத்துகள் பயன்படும் (பக். 37) இருப்பினும் தீபம் -1 கற்கும்போது இவ்வெழுத்துகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டியதில்லை. 36 ஆம் பக்கத்தில் வாசிக்கும் பயிற்சி தரப்பட்டுள்ளது. எழுத்துப் பயிற்சியில் லெ, லே இரண்டு எழுத்துகள் மட்டுமே குறியீட்டுடன் சேர்ந்த எழுத்துப்பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. லெ, யெ, னெ, ரெ. ரே, ளெ, ளே, ணெ, ணே போன்ற அதிகம் பயன்படாத ஒன்பது எழுத்துகளையும் சேர்த்துதான் கற்போருக்கு 152 எழுத்துக அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட (9) எழுத்துகளையும் வாசித்தல் பயிற்சி, காலி இடத்தை நிரப்பும் பயிற்சி ஆகியவற்றுக்கு மட்டும் வைத்துக் கொள்ளுங்கள்.

கற்போருக்கு நோட்டில் தரக்கூடிய எழுத்துப் பயிற்சியில் மேலே குறிப்பிட்ட எழுத்துகளை விட்டு விடுங்கள்.

6, 7, 8 ஆம் பாடங்களில் இவ்வாறு விட வேண்டிய எழுத்துகள் பல உள்ளன. வழிகாட்டியை கவனமாகப் படியுங்கள்.

❋ எண்ணறிவைப் பொறுத்தவரை 1 முதல் 50 வரை எண்களை அடையாளம் காண, எழுத, எண்ணி, அறிய முன் எண், பின் எண், நடு எண்களை அறிய தீபம் 1 இன் மூலம் கற்றுக் கொடுக்க முடியும்.

❋ 3ம் பாடம் முடிவிலும், 6ஆம் பாடம் முடிவிலும், நூல் முடிவிலும் மதிப்பீடுகள் தரப்பட்டுள்ளன. கற்போர் எவ்வளவு தூரம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளத் தான் மதிப்பீடு, மாணவர்கள் எழுதும் தேர்வு போன்றதல்ல கற்போர் எழுதும் மதிப்பீடு.

❋ கற்போர் தங்கள் பெயர், உறவினர் பெயர், ஊர்ப் பெயர் ஆகியவற்றை எழுத ஆரம்பத்திலேயே ஆசைப்பட்டால் கற்றுக் கொடுங்கள். ஆனால் ஒவ்வொரு எழுத்தையும் விளக்கிக் கொண்டிருக்க வேண்டாம். ஒவ்வொருவர் பெயரும் ஒவ்வொரு மாதிரி இருக்கும் ஒவ்வொருவருக்கும் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தால் பாடம் நடத்துவது தடைப்படும்.

❋ ஒவ்வொரு பாடம் முடிவிலும் கற்போரோடு சேர்ந்து பாடுவதற்குப் பாடல்கள் தரப்பட்டுள்ளன. இவை பாடுவதற்காக மட்டுமே வாசிக்க, எழுத இப்பாடல்களில் பயிற்சி தந்துவிட வேண்டாம்.

## பாடமும் பயிற்சியும்

ஒவ்வொரு பாடத்திலும் இரு பகுதிகள் உள்ளன.

ஒன்று பாடம், மற்றொன்று பயிற்சி.

**பாடப் பகுதி என்றால் என்ன?**

படம், படத்திற்குக் கீழே உள்ள முக்கிய வார்த்தைகள், அறிமுகமாகும் குறியீடுகள், குறியீடுகள் மூலம் கண்டறியப்படும் புதிய இன எழுத்துகள். இந்த எழுத்துகளைக் கொண்ட சொற்கள், இந்தச் சொற்களை வைத்து உருவாக்கப்பட்ட சிறிய வாக்கியங்கள் எண்ணறிவுப் பாடம் ஆகியவை பாடப் பகுதியாகும்.

முதல் பாடத்தை வைத்துப் பார்த்தால்,

1. கையில் பட்டா வைத்துள்ள மனிதன் படம்
2. பட்டா, படி என்ற முக்கிய வார்த்தைகள் (சொற்கள்)
3. ப, ட், டா, டி என்ற எழுத்துகள், அதன்வழி அறிமுகமாகும் ■, ■ா, ■ி ப், பா, பி என்ற மூன்று குறியீடுகள்.
4. குறியீடுகளைப் புரிந்து கொள்வதால் தெரிந்து கொள்ளும் இன எழுத்துகள் ட, ப், பா, பி ( ஆக மொத்தம் 8 எழுத்துகள்)
5. இந்த 8 எழுத்துகளைக் கொண்ட சொற்கள்
பட்டா, படி, பாட்டி, பாப்பா, பட்டி, பிடி, டப்பா.
6. இந்தச் சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறு வாக்கியங்கள்

பட்டா படி
பாப்பா படி
பாட்டி படி
பாட்டி பட்டா படி

இவைதான் பாடப்பகுதி. பாடம் என்றால் முதலில் இருந்து கடைசி வரை ஒரு தொடர்பு இருக்க வேண்டும். அப்போதுதான் கற்போர் பாடத்தை ஞாபகத்தில் வைத்திருப்பர். நம்முடைய பாடத்தில் தொடர்பு இருக்கிறதா என்று பாருங்கள். ஓரளவு இருக்கிறது.

பட்டா, படி, பட்டி, பாப்பா, பாட்டி, பிடி

ஆகியவற்றை பட்டா, படி என்ற முக்கிய வார்த்தைகளோடு இணைத்துக் கற்பிக்கலாம். டப்பா, என்பது பாடத்தோடு சம்பந்தமில்லாத சொல். எழுத்துகளை சொல்லில் வைத்துக் காட்டுவதற்காக இச் சொல்லையும் பயன்படுத்துகிறோம்.

ஆக பாடப் பகுதி என்பது ஒரு தொகுதி, அர்த்தமுள்ள ஒரு தொகுதி.

இதைக் கற்பிக்கும் பகுதி என்கிறோம். ஏனெனில் பாடத்தை நீங்கள்தான் கற்பிக்கிறீர்கள்.

பயிற்சி என்றால் என்ன?

இது கற்போருக்கான பகுதி.

பாடத்தில் கற்றுக் கொண்டுள்ள எழுத்துகளையும், சொற்களையும், வாக்கியங்களையும் அடையாளம் காணவும், வாசிக்கவும், எழுதவும் கற்போருக்குப் பயிற்சி அளிக்கிறோம்.

பயிற்சிப் பகுதியில் கற்பித்த எழுத்துகளை அடிப்படையாக வைத்துப் பாடத்தோடு சம்பந்தமில்லாத புதிய சொற்களை நீங்கள் கற்போருக்கு அறிமுகப்படுத்தலாம். அச்சொற்களில் வாசித்தல், எழுதுதல் ஆகிய இரு பயிற்சிகளையும் தரலாம்.

## பாடத்தைத் தொடங்குமுன் இவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

* பார்த்து எழுதச் சொன்னால் வயது வந்தோரில் பலர் மளமளவென்று எழுதி விடுவார்கள். ஆனால் இந்த எழுத்துக்கு இந்த ஓசை என்பதுதான் அவர்களுக்கு எளிதில் பிடிபடாது. எழுதக் கற்றுக் கொடுக்குமுன் 'ஓசைகளை அவர்கள் மனதில் பதிய வைப்பதுதான் நம்முடைய முக்கியமான பணி.
* வாய்மொழிப் பயிற்சி நிறையக் கொடுக்க வேண்டும். வாசிக்கக் கற்றுக்கொண்ட பின்னர் எழுதக் கற்றுக் கொள்வதே சரியான முறையாகும்.
* எழுத்துகளை அடையாளம் காண அவர்கள் பழகிவிட்டால் கல்வி வெற்றிகரமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பது அர்த்தம்.
* எண்ணறிவைப் பொறுத்தவரை, அவர்களுக்கு சிறிய கூட்டல், கழித்தல் உட்பட மனக்கணக்காகக் கொஞ்சம் தெரியும். ஆனால் எண்களை அடையாளம் தெரியாது. எண்களை அடையாளம் காட்டி ஒன்று முதல் ஐம்பது வரை அவர்களை அறிந்து கொள்ளச் செய்வதே தீபம் - 1 ல் நமது பணி.
* பின்வரும் பக்கங்களில் வகுப்புகள் கலந்துரையாடல் முறையில் நடத்த வேண்டும் என்று விவரித்துள்ளோம். இந்த முறையில் கற்பித்தால் கற்பித்தல் சுலபமாகும் என்று மொழியியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஆனால் ஒரு வாய்பாடு போல, ஒரு விதி போல இந்த முறையைத்தான் பின்பற்ற வேண்டும் என்ற வற்புறுத்தல் இல்லை. தக்க முறையில் இடத்துக்குத் தக்கபடி மாற்றியமைத்துக் கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு. இருப்பினும் முதலில் வாய்மொழிப் பயிற்சி அடுத்து எழுத்துப் பயிற்சி என்ற அடிப்படையை மாற்றிவிட வேண்டாம்.
* எழுதும் போது நேர்கோட்டில் எழுதுவதற்கும், ஒவ்வொரு வார்த்தைக்கும் இடையே இடம் விட்டு எழுதுவதற்கும் கற்போருக்கு நீங்கள் பயிற்சி தரவேண்டும்.

## அறிவொளி தீபம் -1

### படங்களின் விளக்கமும் நோக்கமும்

(படம் பற்றிய விவாதத்துடன்தான் ஒவ்வொரு பாடமும் துவங்கப்பட வேண்டும். எந்த நோக்கத்திற்காகப் படங்கள் வரையப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.)

பாடம் : 1

பட்டா கையில் வைத்துள்ள மனிதரின் படம்.
தனக்குப் பட்டா கிடைத்ததில் மகிழ்ச்சி.
தனக்கு எழுதப் படிக்கத் தெரியவில்லையே என்று ஏக்கம்
(அவர் கையிலுள்ள பட்டாவில் உள்ள செய்தியை அவருக்குப் படிக்கத் தெரியவில்லை)

பாடம் : 2

ஏழைக் குடும்பம்.
பசி தீராத குடும்பம்.
மனிதனுக்கு மிகத் தேவையானது உணவு.
உணவு கிடைக்காவிட்டால் பசி.
எந்த மனிதனும் பசியால் வாடக் கூடாது.
(பட விளக்கத்தின்போது திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய சொற்கள் பசி, மனிதன்)

பாடம் : 3

ஒரு பெண் மற்றவர்கள் படிப்பதற்கு உதவி செய்கிறார்.
ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதுதானே வாழ்க்கை!
படித்தவர் உயர்வு அடைவர்.
உள்ளத்தின் வளர்ச்சி தானே உயர்வு!
உழைத்துக் களைத்த பெண்களுக்குப் படிப்பு எதற்கு?
படித்தால் தானே உயர்வு அடைய முடியும்! எனவே படிக்க வேண்டும்.
(விளக்கத்தில் அடிக்கடி வரவேண்டிய சொற்கள் உதவி, உள்ளம், உயர்வு.)

பாடம் : 4

குடிசைக்குள் வாழ்கிற ஒரு குடும்பம்.
கிராமங்களில் பெரும்பாலோர் குடிசைகளில்தான் வாழ்கின்றனர்.
இது சின்ன குடும்பம்.
இது சுத்தமான குடிசை.
(விளக்கத்தில் அடிக்கடி வரவேண்டிய சொற்கள் குடிசை, குடும்பம்)

பாடம் : 5

குழந்தைகள் நம் செல்வம்.
சத்துணவு என்பது எது?
குழந்தைகள் வலிமையாக வளர சத்துணவு தர வேண்டும்.
காய்கறி, பால், முட்டை, பருப்பு, மீன், பழங்கள் போன்றவற்றில் ஊட்டச்சத்து உண்டு. சத்துணவு இல்லாவிட்டால் குழந்தை ஆரோக்கியமாக வளராது.
ஏன் தடுப்பு ஊசி போட வேண்டும்?
தடுப்பு ஊசி போட்டால் இளம்பிள்ளை வாதம் போன்ற கொடூரமான நோய்களில் இருந்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்.
(பட விளக்கத்தில் அடிக்கடி இடம்பெற வேண்டிய சொற்கள் சத்துணவு, எது?, தடுப்பு ஊசி, ஏன்?)

பாடம் : 6

இது ஒரு குடும்பம்.
செலவு அதிகம்.
குடும்பத்தலைவனுக்கு குடிப்பழக்கம் வேறு.
குடும்பச் செலவு அதிகரிக்கும் குடும்பம் உருப்படுமா?
குடிப்பதை விட்டால் செலவும் குறையும். ஏதோ சேமிக்கவும் முடியும்.
சிறுகச் சிறுக சேமித்தால் பெரும் தொகை கிடைக்கும்.
பட விளக்கத்தில் அடிக்கடி இடம் பெற வேண்டிய சொற்கள் செலவு, சேமிப்பு.

பாடம் : 7

மத வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் ஒன்றுபட்டு இருக்கிற காட்சி.
இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் மூவரும் ஒன்றுபட்டு இருக்கிறார்கள்.
இவ்வாறு ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஓதுதல் அவசியம்.
(கற்போர் இதை முழுமையாகப் புரிந்துகொள்ளும்வரை படம் பற்றிய விவாதம் நடைபெற வேண்டும்.)
நம்முடைய வீடு சண்டை சச்சரவில்லாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.
அதைப் போல நம்முடைய நாடும் சண்டை சச்சரவில்லாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.
நாம் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். ஒன்று பட்டால் உயர்வடைவோம்.
ஒற்றுமையின் அவசியத்தை மற்றவருக்கு ஓத வேண்டும்.
(பட விளக்கத்தில் அடிக்கடி இடம்பெற வேண்டிய சொற்கள் வீடு, நாடு, ஒன்றுபடு, ஓது)

பாடம் : 8

அம்மா தன் பெண் குழந்தையை அன்போடு கொஞ்சுகிற படம்.
அம்மாவைப் போல் அன்பு உள்ளவர் யார்?
பெண் என்றாலே அன்புதானே!
பெண் குழந்தை பிறந்தால் அது ஒரு செல்வம்.
குடும்பத்தின் ஆசைச் செல்வம் பெண் குழந்தை.
பெண் குழந்தைக்குக் கட்டாயம் நாம் கல்வி கொடுக்க வேண்டும்.
(விளக்கத்தில் அடிக்கடி இடம்பெற வேண்டிய சொற்கள் பெண் குழந்தை, அன்புச் செல்வம், ஆசைச் செல்வம்)

## படம் பற்றிய கலந்துரையாடல்.

- படத்தைப் பற்றிய கலந்துரையாடல்தான் கற்பித்தலின் முதல் கட்டம். படத்தைப் பார்த்ததும் கற்போர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கருத்து கேளுங்கள்.
அவர்களை நிறையப் பேச விடுங்கள்.
தப்பாகப் பேசினாலும் பொறுத்துக் கொள்ளுங்கள்.

பாடம் 1 இல் உள்ள படத்தைப் பார்த்துவிட்டு "அந்த ஆளுக்குத் தூக்க கலக்கம்" என்று கிண்டலாகச் சொன்னாலும் கேட்டுக்கொள்ளுங்கள். அவர்கள் என்ன பேசினாலும் அது முக்கியமானதுதான்.

முதலில் அவர்களைப் பேச வைப்பது கஷ்டம். பின்னர் நிறுத்துவது கஷ்டம்.

போகப் போக இதையெல்லாம் சமாளிக்கிற பெரிய திறமைசாலியாக நீங்கள் மாறிவிடுவீர்கள்.

நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லும்போது பட்டா போட்ட சொந்த நிலம் இருந்தும் படிக்கத் தெரியாததால் ஏக்கம் கொண்ட மனிதனின் படம் என்ற கருத்தைத் தெரிவியுங்கள்.

ஒவ்வொரு பாடத்திலும் படத்தைக் காட்டிக் கற்போரிடம் நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகளைக் கொடுத்துள்ளோம். இது அவர்களைப் பேச வைப்பதற்காக,

பாடத்தின் நோக்கத்தை முதலிலேயே அவர்கள் தெரிந்து கொள்வதற்காக.

## கலந்துரையாடலைத் துவங்குவதற்கான கேள்விகள்

பாடம் : 1

1. இந்தப் படத்தில் உள்ளவர் கையில் என்ன இருக்கிறது?
2. இவருக்குச் சொந்த நிலம் இருக்குமா?
3. உங்களில் யார் யாருக்கு பட்டா இருக்கிறது?
4. நிலப்பட்டா சிலருக்கு இருந்தும் சிலருக்கு இல்லாமல் இருப்பதற்கும் என்ன காரணம்?
5. பட்டா அவசியம் தேவைதானா? ஏன்?
6. படிக்காத ஒருவர் படும் துயரங்கள் என்ன?

பாடம் : 2

1. இந்தப் படம் எதை விளக்குகிறது?
2. படத்தில் உள்ள இருவரும் வருத்தத்தோடு இருக்கக் காரணம் என்ன?
3. மனிதன் பட்டினி கிடக்கலாமா?
4. இந்தக் குடும்பத்துக்குப் போதிய உணவு கிடைக்க வழி என்ன?

பாடம் : 3

1. படத்தில் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள்?
2. உங்களுக்கு யாரேனும் உதவி செய்ததுண்டா?
3. நீங்கள் யாருக்காவது உதவி செய்திருக்கிறீர்களா?
4. உதவி செய்யும் ஒருவரை எப்படிப் பாராட்டுவீர்கள்?
5. படிப்பதால் வாழ்வில் உயர்வு ஏற்படுமா?

பாடம் : 4

1. படத்தில் உள்ள குடிசை வசதியுள்ளதா? சுமாரானதா? மோசமானதா?

2. கிராமங்களில் எதைக்கொண்டு குடிசை வேய்கிறார்கள்?

3. பொதுவாக குடிசைகளை எங்கு பார்க்கலாம்?

4. சில குடும்பங்கள் மட்டும் ஏன் வசதியான வீடுகளில் வசிக்கின்றனர்?

5. குடிசையைச் சுத்தமாக வைத்திருப்பது எப்படி?

பாடம் : 5

1. படத்தில் என்னென்ன உணவுப் பொருள்கள் காட்டப்பட்டுள்ளன?

2. உங்களுக்கு இவை கிடைக்கின்றனவா?

3. இவற்றை நீங்கள் சாப்பிடுகிறீர்களா?

4. அதிக விலையுள்ள உணவுப் பொருள் எது?

5. சத்தான உணவுப் பொருள் எது?

6. குழந்தைக்குத் தடுப்பூசி போடும் பழக்கம் உண்டா?

7. ஊசி போட்டுக் கொள்ளப் பயப்படுவீர்களா?

பாடம் : 6

1. குடிப்பது சரியா?

2. குடிப்பழக்கம் உடம்புக்கு நல்லதா?

3. குடிப்பழக்கத்தை நிறுத்தினால் சேமிக்க முடியுமா?

4. குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு உங்களுக்குத் தெரிந்த வழி என்ன?

5. நீங்கள் ஏதும் சேமிக்கிறீர்களா?

பாடம் : 7

1. படத்தில் என்னென்ன கோயில்கள் இருக்கின்றன?

2. நீங்கள் எந்தெந்த கோயில்களுக்குப் போவீர்கள்?

3. சாமிகளுக்குள் ஏதும் வித்தியாசம் இருக்கிறதா?

4. மனிதர்களுக்குள் ஏதும் வித்தியாசம் இருக்கிறதா?

5. சண்டை சச்சரவில்லாமல் வாழும் காலம் வருமா?

பாடம் : 8

1. பெண் குழந்தைதான் பிரியமான குழந்தை என்று சொல்கிறார்களே, உண்மையா?

2. பெண் குழந்தையையும், ஆண் குழந்தையையும் உங்கள் வீட்டில் சமமாக நடத்துகிறீர்களா?

3. பெண் குழந்தை படிக்க வேண்டுமா, வேண்டாமா?

## பாடம் : 1

முதல் கட்டம்

படத்தைப் பற்றிய கலந்துரையாடலுடன் பாடத்தைத் துவக்குங்கள். கலந்துரையாடலைத் துவங்குவதற்கான கேள்விகளை முன்னரே

தந்துள்ளோம். கலந்துரையாடல் எங்கே துவங்கி எங்கே சென்றாலும் பட்டா, படி என்ற முக்கிய வார்த்தைகளில் வந்து அது முடிய வேண்டும். பட்டா, படி என்ற வார்த்தைகள் பாடத்தின் உள்ளே அழைத்துப் போகிற வாசற்படிகள் போல.

**இரண்டாம் கட்டம்.**

பட்டா, படி - என்ற இரு சொற்களையும் கரும்பலகையில் எழுதுங்கள். (அவர்கள் எழுத வேண்டாம்) எழுத்துகளை பிரிக்காமல் முழுச் சொல்லாக பட்டா படி என்று படித்துக் காட்டுங்கள். பிறகு அவர்களை வாசிக்கச் சொல்லுங்கள். இந்தப் பயிற்சியின் முடிவில் பட்டா என்ற சொல்லை நீங்கள் காட்டியதும் அவர் "பட்டா" என்று சொல்ல வேண்டும்.

படி என்ற சொல்லைக் காட்டியதும் அவர் "படி" என்று சொல்லவேண்டும்.

இந்தப் பயிற்சியில் கற்போர் சுலபமாகத் தேறிவிடுவர்.

**மூன்றாவது கட்டம்.**

இனி இரண்டு சொற்களையும் எழுத்துக் கூட்டிப் படித்துக் காட்டுங்கள்.

ப ... ட் ... டா ----- பட்டா

ப ... டி ----- படி

அவர்களையும் அவ்வாறே படிக்கச் சொல்லுங்கள்.

இந்தப் பயிற்சியின் மூலம் அவர்களுக்கு ஓசைகளைக் குறிக்கும் எழுத்துகளை அடையாளம் காட்டுகிறோம்.

அவர்கள் எழுத்துகளை அடையாளம் கண்டுகொள்வது மிக முக்கியமானது.

**நான்காம் கட்டம்.**

தெரிந்த அடையாளங்களை வைத்துப் புதிய எழுத்துக்களை அறிந்து கொள்வதற்கான கட்டம் இது.

ப, ட், டா, டி என்ற நான்கு ஓசைகளையும் அவற்றுக்கான எழுத்துகளையும் இப்போது கற்போர் அறிந்திருப்பர்.

ப, ட என்ற எழுத்துகளே பட்டா, படி என்ற சொற்களில் அமைந்துள்ள அடிப்படை எழுத்துகளாகும்.

ப - வரிசையில் ப மட்டுமே இடம் பெற்றுள்ளது.

ட - வரிசையில் ட், டா, டி என்ற மூன்று எழுத்துகள் இடம் பெற்றுள்ளன.

ட - இதன் மேல் புள்ளி வைத்தால் - ட்

ட - இதன் அருகே ா சேர்த்தால் - டா

ட - இதன் மேல் ி போட்டால் - டி

இதே போல்

ப - இதன் மேல் புள்ளி வைத்தால் - ப்

ப - இதன் அருகே ா சேர்த்தால் - பா

ப - இதன் மேல் ி போட்டால் - பி

என்று எழுதிக் காட்டி, அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இப்போது அவர்கள் எட்டு எழுத்துகளைத் தெரிந்து கொண்டுள்ளனர்.

ட ட் டா டி

ப ப் பா பி

. , ா , ி - என்ற குறியீடுகளை அவர்கள் புரிந்துகொண்டால்தான், கற்றுக்கொண்ட எழுத்துகள் அவர்கள் ஞாபகத்தில் நிற்கும். குறியீடுகளை எப்படி அவர்களுக்கு விளங்க வைப்பது?

ட ட் டா டி

ப ப் பா பி

என்ற எழுத்துகளை எழுதி திரும்பத் திரும்ப வாசிக்க வைத்து, வாசிக்கும்போது குறியீடுகளை சுட்டிக் காட்டினால் அவர்கள் புரிந்து கொள்வார்கள். எழுத ஆரம்பிக்கும் போது குறியீடுகளின் பயனை அவர்கள் விளங்கிக் கொள்வார்கள்.

**ஐந்தாம் கட்டம்.**

அவர்களுக்கு நாம் அறிமுகப் படுத்தியுள்ள எட்டு எழுத்துகளையும் அவற்றுக்கான ஓசைகளையும் கற்போர் மனதில் பதிய வைப்பதற்கான பயிற்சி இது.

பட்டா படி

படி பட்டா

பட்டி பாட்டி

பிடி பாப்பா

பாப்பா டப்பா

இந்தச் சொற்களை வாசிக்கக் கற்றுக் கொடுங்கள். முதலில் சொல்லாக வாசிக்கக் கற்றுக் கொடுங்கள். சொல்லை அவர்கள் அடையாளம் கண்டு கொண்டதும்

ப ... ட் ... டா - பட்டா

ப ... டி - படி

ப ... ட் ... டி - பட்டி

பா ... ட் ... டி - பாட்டி

பி ... டி - பிடி

ட ... ப் ... பா - டப்பா

பா ... ப் ... பா - பாப்பா

என்று எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். தாங்களாகவே அவர்கள் எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றுக் கொண்டால் எட்டு எழுத்துகளையும் அவர்களுக்கு அடையாளம் தெரிகிறது என்று அர்த்தம்.

**ஆறாம் கட்டம்.**

எழுத்துகளையும், சொற்களையும் காட்டும் தெளிவு கற்போருக்கு இப்போது வந்திருக்கும்.

அவர்கள் அறிந்து கொண்ட எழுத்துகளையும், சொற்களையும் கொண்டு அர்த்தமுள்ள வாக்கியங்களை உருவாக்கி அவற்றையும் வாசிக்கப் பயிற்சி அளிப்பது அடுத்த நிலை.

பட்டா படி
பாப்பா படி
பாட்டி படி
பாட்டி பட்டா படி

என்பவை முதல் பாடத்தில் கற்றுக் கொண்ட எழுத்துகளையும், சொற்களையும் வைத்து உருவாக்கப் பட்ட அர்த்தமுள்ள வாக்கியங்கள் ஆகும்.

வாக்கியத்தை வாசிக்கும் பயிற்சியிலும்

1. முழுச் சொல்லாகவும்
2. எழுத்துக் கூட்டியும்

வாசிக்கப் பழக்க வேண்டும்.

இப்போது எழுத்து, சொல், வாக்கியம் என்ற மொழியின் மூன்று நிலைகளையும் கற்போர் தெரிந்து கொள்கிறார்.

**ஏழாம் கட்டம்** (இதுவரை பாடம். இனிமேல் பயிற்சி)

இதுவரை உங்கள் உதவியுடன் எழுத்துகளையும், சொற்களையும், வாக்கியங்களையும் அவர்கள் வாசித்து வந்தார்கள்.

இப்போது நாம் அவர்களுக்கு அடையாளம் காணப் பயிற்சி அளிக்கிறோம். முதலில் எழுத்தை, பின்னர் சொல்லை, அதன் பின்னர் வாக்கியத்தை அவர்கள் அடையாளம் காணவேண்டும்.

பயிற்சி என்ற பக்கத்திற்கு வாருங்கள்.

முதல் பயிற்சி எழுத்துகளை வட்டமிடுவது.

ட என்ற எழுத்தை வட்டமிட்டுக் காட்டி, ப ப் ட ப ட என்ற ஐந்து எழுத்துகளை வரிசையாக எழுதி ட வருமிடங்களை வட்டமிடச் சொல்கிறோம். புத்தகத்தில் இவ்வாறு நான்கு எழுத்துகளுக்கு அடையாளம் காணும் பயிற்சி தரப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு எழுத்துகளுக்கும் (ப, டி, ட், டா) கரும்பலகையில் எழுதி இதே மாதிரிப் பயிற்சி நீங்கள் கொடுக்க வேண்டும்.

- அடுத்த பயிற்சி எழுத்துகளைச் சத்தமாக வாசிப்பதற்கு, அடுத்த பயிற்சி சொற்களை எழுத்துக் கூட்டி வாசிப்பதற்கு, அடுத்த பயிற்சி வாக்கியங்களை வாசிப்பதற்கு.

இந்த நான்கு பயிற்சிகளும் புத்தகத்தில் தரப்பட்டுள்ளன.

**எட்டாம் கட்டம்.**

எழுத்துகளையும், அவற்றுக்கான ஓசைகளையும் கற்போர் வாய்மொழிப் பயிற்சியின் மூலம் தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்ட பின்னர் எழுதப் பயிற்சி அளிக்கிறோம்.

எழுதப் பயிற்சி அளிக்கும்போது முதலில் அவர்களை சிலேட்டில் எழுதச் சொல்லுங்கள். சிலேட்டில் திருத்தமாக எழுதக் கற்றுக் கொண்ட பிறகு நோட்டில் எழுதட்டும். புத்தகத்தில் எழுதுவது இறுதி நிலையாக இருக்கட்டும். ஆனால் கட்டாயம் புத்தகத்தில் எழுதப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

எழுத்துப் பயிற்சி இரண்டு விதமாக இருப்பதைப் பார்ப்பீர்கள்.

ப, ப், ட், டா என்ற எழுத்துகளை நேரடியாகக் கொடுத்து எழுத வைப்பது ஒரு பயிற்சி. ப என்ற எழுத்தையும் ா என்ற குறியீட்டையும் பக்கத்தில் கொடுத்து பா என்று அவர்களை எழுத வைப்பது மற்றொரு பயிற்சி.

எழுதும்போது வாய்விட்டு உச்சரித்துக் கொண்டே எழுதுவதற்கு அவர்களைத் தூண்ட வேண்டும். இது முக்கியம்.

எழுத்துகளை எழுதும் பயிற்சிக்குப் பின்னர் சொற்களை எழுதும் பயிற்சி தரவேண்டும்.

**ஒன்பதாம் கட்டம்.**

வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்ட பின்னர் எல்லோரும் சேர்ந்து ஒரு பாடலைப் பாட வேண்டும். இந்தப் பாடலுக்குத் தனி ராகம் இல்லை. நீங்கள் எப்படிப் பாடுகிறீர்களோ அதுதான் பாட்டு.

எங்கே பாடுவோமா?...

பட்டா போட்ட பூமி வேணும்
டும்! டும்! டும்!
பாடுபட்டா பலன் இருக்கனும்
டும்! டும்! டும்!
படிக்க வாங்க! படிக்க வாங்க!
டும்! டும்! டும்!
பாட்டாளிகளே நீங்களும் வாங்க!
டும்! டும்! டும்!
நாலு எழுத்து படிச்சுப் பாரு!
டும்! டும்! டும்!
நம்ம வாழ்க்கை உயர்ந்து விடும்.

**வரக்கூடிய சிக்கல்.**

ப் பா
ட டா

என்ற குறில் நெடில்களை அறிமுகப்படுத்தும்போது இரண்டையும் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில் சிக்கல் வரலாம். சிக்கலை எப்படித் தீர்ப்பது? தொடர்ந்து வாய்மொழி, எழுத்துப் பயிற்சிகள் தருவதன் மூலமே இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியும்.

## பாடம் - 2

- ✱ முதலில் எப்போதும் போல் படம் பற்றிய விவாதம்.
- ✱ முக்கிய வார்த்தைகள் பசி, மனிதன்.
- ✱ புதிய குறியீடுகள் ஏதுமில்லை.
- ✱ புதிய உயிர் மெய் எழுத்துகள் ச, ம, த, ன.

* ஏற்கெனவே அறிந்துகொண்ட குறியீடுகளைப் பயன்படுத்தி நாம் கற்றுக் கொடுக்க முடிந்த எழுத்துகள்

  ச ச் சா சி
  ம ம் மா மி
  த த் தா தி
  ன ன் னா னி

* இப்பாடத்தில் அறிமுகமாகும் எழுத்துகளைக் கொண்ட சொற்கள்
  சட்டி, மடம், தடம், தினம்

* இப்பாடத்தில் அதிகம் பயன்படாத எழுத்து
  னா

  சின்னான் என்ற சொல்லில் அபூர்வமாக இடம் பெறுகிறது.

  அறிமுகமான சொற்களை வைத்து சில சொற்றொடர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

* 11 முதல் 20 வரை எண்களை அறியவும் பின்னர் எழுதவும் இப்பாடத்தில் கற்பிக்க வேண்டும்.

* பாடப் பகுதியை முடித்தபின் வாசிக்கவும் எழுதவும் பயிற்சி கொடுங்கள். எண்ணறிவுப் பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும்.

* பயிற்சியில் சில சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முன் பாடத்தில் கற்ற எழுத்துகள், இப் பாடத்தில் கற்ற எழுத்துகள் ஆகியவற்றைக் கொண்டு நீங்களே புதிய சொற்களைச் சிந்தித்து அறிமுகப்படுத்தலாம்.
  உதாரணமாய்

  தாடி, பட்டம், சட்டம்

என்ற சொற்களைக் கொடுக்கலாம் அல்லவா? நீங்களும் சில கண்டுபிடிக்கலாம். புதிய சொற்களைக் கண்டு பிடித்து நீங்கள் அறிமுகப்படுத்தினால், அச் சொற்கள் எவை என்பதை,

கல்விக்குழு,
அறிவொளி இயக்கம்,
தஞ்சாவூர் மாவட்டம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
பனகல் கட்டிடம்,
தஞ்சாவூர்.

என்ற முகவரிக்கு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள். அதேபோல், கற்றுக் கொடுத்த எழுத்துகளைக் கொண்டு பயிற்சியில் கொடுத்தது போகப் புதிய சொற்றொடர்களையும் நீங்கள் கற்றுக் கொடுக்கலாம்.
உதாரணமாய்,

தாத்தா தாடி
சித்தி பாப்பா

என்ற சொற்றொடர்களைக் கற்றுக் கொடுக்கலாம் அல்லவா? நீங்கள் கண்டுபிடித்துக் கற்றுக் கொடுக்கும் சொற்களிலோ

சொற்றொடர்களிலோ நாம் கற்றுக் கொடுக்காத எழுத்து எதுவும் வந்துவிடக் கூடாது. கவனம்.

பயிற்சியில் (பக்கம்11) வாழை இலைமேல் ஏற்கெனவே கற்ற 10 எழுத்துகள் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைக் கொண்டு கற்போர் சொற்களை உருவாக்க வேண்டும். கற்போர் இந்தப் பயிற்சியைப் புரிந்து கொள்ளாமல் திகைத்து நின்றுவிடக் கூடாது. நீங்கள் உதவ வேண்டும்.

இறுதியாகக் கற்போரோடு சேர்ந்து நீங்கள் பாடவேண்டிய பாடல்:

பசி வந்தாப் பறந்து போகும்
பறந்து போகும்
பறந்து போகும்
படிச்ச பாடம் மறந்து போகும்
மறந்து போகும்
மறந்து போகும்
மனிதனுக்குச் சோறு போடு
சோறு போடு
சோறு போடு
மத்ததெல்லாம் அப்புறம் பாரு
அப்புறம் பாரு
அப்புறம் பாரு (பசி வந்தாப்......)

## பாடம் - 3

❋ அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய எழுத்துகள் 21

உ
வ வ் வா வி வு
ய ய் யா யி யு
ர ர் ரா ரி
ள ள் ளா ளி
சு பு

❋ புதிய குறியீடு உண்டு. இருப்பினும் உ கரக் குறியீடு யு, சு, பு, வு போன்ற எழுத்துகளில் நேர் கோடாகவும், மு, ரு போன்ற எழுத்துகளில் வளை கோடாகவும் வருகிறது. து, று போன்ற எழுத்துகளில் வேறுவிதமாக வருகிறது. இவ்வாறு உகரம் மெய்யெழுத்துடன் சேர்ந்து வரும் போது பல்வேறு அடையாளம் தோன்றுகிறது. முன் பாடங்களில் துணை எழுத்து பா, இ கரக் குறியீடு - பி ஆகியவற்றைக் கற்போருக்கு விளக்கிக் காட்டியது போல் உ கரக் குறியீட்டை ஒரே குறியீடாகக் காட்ட இயலாது. எனவே நேர் கோடாக வரும் குறியீட்டை மட்டும் காட்டியுள்ளோம்.

* குழப்பம் வரும் என்பதற்காகவே வு, பு, யு, சு ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கும் நாம், வளைகோட்டுக் குறியீட்டை உடைய ரு எழுத்தை அடுத்த பாடப் பகுதியில் கற்றுக் கொடுக்கிறோம்.

* யு என்ற எழுத்து பாடத்தில் வரவில்லை. பயிற்சியில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

* இப்பாடத்தில் எழுத்துகளை அறிமுகப்படுத்த வந்த சொற்கள் உமி, மாவு, வட்டி, விவாதம், தயார், ராட்டினம், பயிர், மரம், தாய், தர்மம்.

* வாக்கியங்களைப் பொறுத்தவரை - சில பாடப் புத்தகங்களில்

  தினம் யார் உதவினார்
  மாமா தினம் உதவினார்

  என்ற இரு வாக்கியங்கள் மட்டும் இருக்கும்.
  இப் பாடப் புத்தகத்தில் 4 வாக்கியங்கள் உள்ளன.

  யார் படித்தார்
  மாமா படித்தார்.

  என்ற வார்த்தைகள் அந்த வாக்கியங்களில் இருக்கும். க், க ஆகிய எழுத்துகள் இதுவரை கற்பிக்கப்படவில்லை. எனவே பாப்பா படித்திட மாமா உதவினார் என்ற வாக்கியங்த்தை மட்டும் இப்பாடத்தில் நீங்கள் கற்பித்தால் போதுமானது.

* ஒருவருக்கொருவர் உதவி செய்து உயர வேண்டும் என்பதுதான் பாடப்பகுதியின் கருத்து.

* எண்களை 6 இல் இருந்து 10 வரை கற்பிக்கிறோம். நாணயங்கள், ரூபாய் நோட்டுக்கள் இவற்றை உபயோகித்து எண்களைக் கற்பிக்கலாம். கை விரல்கள், குச்சிகள், இலைகள், கற்கள் ஆகியவற்றையும் உபயோகப்படுத்தலாம்.

  பூஜ்யம் என்ற எண்ணைத் துவக்கத்தில் நேரடியாக அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. 10 என்ற எண்ணை எழுதும்போது பூஜ்யத்தை உபயோகித்தால் போதுமானது. ஒவ்வொரு எண்ணையும் தனித் தனியாக அட்டைகளில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு அட்டையாகக் கற்போரிடம் காட்டி அவர்களை அந்த எண் எது என்று சொல்லச் சொல்லுங்கள். எண்களைத் திரும்பத் திரும்ப எழுதச் சொல்லிப் பயிற்சி கொடுக்க வேண்டும். அடையாளம் காட்டும் பயிற்சிகளும் நிறையத் தர வேண்டும்.

* இது வரையில் கற்ற எழுத்துகளை வைத்து, பயிற்சிப் பகுதியில் இல்லாத புதிய சொற்களைக் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்.

  | | | |
  |---|---|---|
  | உப்பு | மிட்டாய் | புதன் |
  | உரி | பட்டாசு | புத்தி |

  போன்ற சொற்களையும் பயிற்சிக்குக் கொடுக்கலாம். நீங்களும் சில சொற்களைக் கண்டுபிடித்துத் தரலாம். இதுவரை நாம் கற்பிக்காத எந்த எழுத்தும் அந்தச் சொல்லில் வந்துவிடக் கூடாது. அதில் கவனம் வேண்டும்.

* பயிற்சியில் தவிடு என்ற வார்த்தை தவறாக இடம் பெற்றுள்ளது. அதைக் கற்பிக்க வேண்டாம்.
* 16 ஆம் பக்கத்தில் உள்ள பயிற்சி எண் 1 இல் உள்ள வார்த்தைகளில் டிக்டேஷன் போடவும்.
* மூன்றாம் பாடம் முடிந்ததும் கூட்டாக நாம் பாடும் பாடல்.

" உயர உயரச் செல்லுவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!
உச்சி வரையில் செல்லுவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!
பயிரைப் போல வளருவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!
பகிர்ந்து பகிர்ந்து உண்ணுவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!
மரத்தைப் போல உதவுவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!
மனசு போல வாழுவோம்!
லெப்ட்! ரைட்! லெப்ட்! ரைட்!

## எண்ணறிவைக் கற்றுக் கொடுக்கப் பாடல்

ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரு பூ பூத்தது!
இரண்டு குடம் தண்ணி ஊத்தி
இரண்டு பூ பூத்தது!
(இதே போல் பத்துவரை கற்போரைப் பாடச் சொல்லுங்கள்)

## மதிப்பீடு - 1

மதிப்பீட்டை ஒரே நாளில் முடிப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது.

மதிப்பீட்டின் போது கற்போரை உற்சாகப்படுத்த வேண்டும்.

மதிப்பீட்டில் நன்றாகச் செய்தவர்கள், தவறாகச் செய்தவர்கள் இருவரையும் ஒப்பிடக் கூடாது.

கற்போர் மனம் தளர்ந்து போகும் விதத்தில், மதிப்பீட்டைக் கறாராகச் செய்யக்கூடாது.

மதிப்பெண் வழங்காமல் மிக நன்று, நன்று, முன்னேற வேண்டும் என்ற நிலைகளில் கற்போரை வரிசைப்படுத்துவது நல்லது.

மிக வற்புறுத்தினால், மதிப்பெண் வழங்குங்கள்.

தாராளமாக மதிப்பெண்கள் வழங்குங்கள்.

கற்போர்கள் மதிப்பீட்டுத் தாளிலேயே பயிற்சி செய்வது அவசியம்.

## மதிப்பீடு 1 மொத்த மதிப்பெண்கள் 50

| | | |
|---|---|---|
| 1. வட்டமிடும் எழுத்துப் பயிற்சி, வட்டங்களுக்குள்ளே எழுத்துகளை நீங்களே எழுதிக் கொள்ள வேண்டும். மதிப்பெண் 1 x 5 | | - 5 |
| 2. வாசித்தல் பயிற்சி எழுத்துக்கள் - 2 மதிப்பெண், சொற்கள் - 8 மதிப்பெண் (மொத்தம்) | - | 10 |
| 3. பார்த்து எழுதவும் 2 x 5 | - | 10 |
| 4. வார்த்தைகளை உருவாக்கும் பயிற்சி | - | 10 |
| 5. எண்ணறிவுப் பயிற்சி | - | 4 |
| 6. விடுபட்ட எண்கள் | - | 10 |
| 7. அழகிய கையெழுத்துக்கு | - | 1 |
| | | 50 |

## பாடம் - 4

* 20 எழுத்துகள் அறிமுகமாகியுள்ளன.
  க க் கா கி கு கை
  மு ரு டு ளு
  பை டை சை மை தை னை வை யை ரை ளை
* புதிய குறியீடு உண்டு. மை என்பதுதான் புதிய குறியீடு இதைக் கற்பிப்பது சுலபம். ஆனால் ஏற்கெனவே கற்ற 'ன' விற்கும் இப்போது அறிமுகமாகும் குறியீடான 'ை'
  விற்கும் வித்தியாசத்தை உணர்த்த வேண்டும். பயிற்சி நிறையத் தர வேண்டும்.
* உகரத்தின் வளைகோட்டுக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
  கம்பு, தள்ளு, பையன்
  மற்ற சொற்கள் எழுத்துகளை அறிமுகப்படுத்த வந்த சொற்கள்.
* சிறிய, பெரிய வாக்கியங்கள் யாவும் முக்கிய வார்த்தைகளோடு சம்பந்தப்பட்டவை.
* எண்ணறிவில் கழித்தல் கணக்கு கற்பிக்கிறோம். ஓரிலக்க எண்களில் ஒரு எண்ணிலிருந்து அதற்குக் குறைவான எண்ணைக் கழிக்கச் சொல்கிறோம்.
* 10 குச்சிகளை எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் 5 குச்சிகளை எடுத்துவிடுங்கள். மீதமுள்ள குச்சிகளை எண்ணச் சொல்லுங்கள்.
* மு என்ற எழுத்து பாடத்தில் வராமல் பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ளது.

'உ' வின் வளைகோட்டுக் குறியீடான கு, டு, ரு, மு, ளு ஆகியவற்றுக்கு, இந்தப் பாடத்தில் நிறையப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

* இதுவரை கற்றுக் கொடுத்த எழுத்துகளை வைத்துப் பயிற்சிகளில் இடம்பெறாத புதிய சொற்களையும் கற்றுக் கொடுக்கலாம்.

(உதாரணம்)

| | |
|---|---|
| பிச்சை | வரிசை |
| மைதா | சித்திரை |
| ரவை | குப்பை |

* பாடம் முடிந்ததும் நாம் கூட்டாகச் சேர்ந்து பாடும் பாடல் இதோ

"உப்பு இல்லாப் பண்டம் - அதைக்
குப்பையிலே போடு!
சுத்தம் இல்லாப் பண்டம் - அது
சுகத்துக்குக் கேடு!
மாடி வீட்டின் செழிப்பு - அது
குடிசை தந்த உழைப்பு!
படித்த நல்ல குடும்பம் - அது
பள்ளிக் கூடம் ஆகும்!"

## பாடம் 5

* 11 எழுத்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

எ ஏ
ண ண் ணா ணி ணை ணு து ஊ

* உகர ஓசைக்கான ஒரு குறியீடு கொடுக்கப்பட்டுள்ளது.

து, னு, ணு - இவ் எழுத்துகளில் மேல் நோக்கிய கோடு உகர ஓசையின் குறியீடாகிறது.

உகர ஓசைக்கு இதுவரை மூன்று குறுயீடுகளைப் பார்த்தோம்.

சு பு யு வு - கீழ் நோக்கிய கோடு
கு டு ரு மு ளு - வளை கோடு
து னு ணு - மேல் நோக்கிய கோடு

கற்போரிடம் இதையெல்லாம் சொல்ல வேண்டாம். சொன்னால் குழப்பம் வரும். உங்களுக்கு இதைச் சொல்வதற்குக் காரணம் உகர எழுத்துகளுக்கு நிறைய வாசிக்கும், எழுதும் பயிற்சிகளைக் கற்போருக்கு நீங்கள் தர வேண்டும்.

* ஊ என்ற எழுத்துக்கு நிறையப் பயிற்சி தேவை.

* பாடப் பகுதியில் உள்ள சொற்களில் பெரும்பான்மையானவை எழுத்தை அறிமுகப்படுத்த வந்தவையே.

* ஊதல் என்ற சொல் சில பாடப் புத்தக்த்தில் இடம் பெற்றுள்ளது. 'ல்' இன்னும் அறிமுகம் ஆகாததால் 'ஊதல்' என்ற சொல்லைக் கற்பிக்கத் தேவையில்லை.

* வாக்கியங்கள் யாவும் பாடப்பகுதியோடு சம்பந்தப்பட்டவை.
* எல்லோருக்கும் சத்துணவும், குழந்தைகளுக்கு நோய்தடுப்பு ஊசியும் தேவையானவை என்று பாடப்பகுதி வலியுறுத்துகிறது.
* 21 முதல் 50 வரை எண்களைக் கற்றுத் தருகிறோம். பத்துக்காசுக்களைக் கொண்டு கற்பிக்கலாம்.
* குச்சிகளை பத்து பத்தாக அடுக்கியும் கற்பிக்கலாம். கூட்டல் வாய்பாடு தரப்பட்டுள்ளது.
* இப் பாடத்தில் விரிவான பயிற்சிகள் தரப்பட்டுள்ளன.
* ஊமை, ஊர், வண்டி, மணல், அண்ணன், அண்ணி, அணைக்கட்டு, துன்பம், துப்பாக்கி ஆகிய சொற்களையும் அறிமுகப்படுத்திப் பயிற்சி தரலாம்.
* 30 ம் பக்கத்தில் உள்ள பயிற்சிகளைக் கற்போர் புரிந்து கொள்ளவும், ஆர்வத்துடன் ஈடுபடவும் நீங்கள் உதவ வேண்டும்.
* ண் எழுத வேண்டிய இடத்தில் ன் என்று கற்போர் எழுதினால் அதைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டாம். தனிக் கவனம் செலுத்தித் திருத்தப் பாருங்கள். முடியாவிட்டால் சோர்ந்து போக வேண்டாம்.
* ன், ண், ன, ண வேறுபாடுகளை தமிழ் மொழியைப் பேசவும் எழுதவும் பழகிக் கொண்ட பலர் (கல்லூரி மாணவர் உட்பட) இன்னும் புரிந்து கொள்ளவில்லை. எனவே, முடிந்தவரை முயன்று பாருங்கள். முடியாவிட்டால் கற்போர் எழுதுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.
* கூட்டாகச் சேர்ந்து நாம் பாட வேண்டிய பாடல்:

தில்லி தில்லி பொம்மக்கா
தில்லாட்டம் பொம்மக்கா!
பருப்புச் சாதம் கொண்டு வா
பாங்காய் நாமும் உண்ணுவோம்!
கம்மங்கஞ்சி கொண்டு வா
கரைத்து நாமும் உண்ணுவோம்!
அவித்த முட்டை கொண்டு வா
அமர்ந்து நாமும் உண்ணுவோம்!
தில்லி தில்லி பொம்மக்கா
தில்லாட்டம் பொம்மக்கா!
தட்டம்மையைத் தடுக்க
தடுப்பூசி போடுவோம்!
காச நோயைத் தடுக்க
கட்டாயம் போடுவோம்!
முத்தடுப்பு ஊசியை

முறையாகப் போடுவோம்!
தில்லி தில்லி பொம்மக்கா
தில்லாட்டம் பொம்மக்கா!
ஊரில் உள்ள மக்களே
ஒன்றாக வாருங்கள்!
திண்ணையிலே அமர்ந்து
தினமும் நாமும் படிப்போம்!

## நோய்த் தடுப்பு

**இளம் குழந்தைகளுக்கு அதாவது ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய தடுப்பூசிகள்**

**தடுப்பூசி முறைகளைக் கற்போருக்குத் தெளிவாக விளக்கிச் சொல்லவும்.**

| வயது | தடுப்பு ஊசி |
|---|---|
| 1. மூன்று முதல் ஒன்பது மாதம் வரை | 1. அம்மைக்கு எதிரான தடுப்பூசி |
| | 2. காசநோய்த் தடுப்பு ஊசி |
| | 3. முத்தடுப்பு ஊசி (தடுக்கும் நோய்கள் : டிப்தீரியா, கக்குவான் இருமல், ரண ஜன்னி) டிப்தீரியா - தொண்டை அடைப்பான். |
| | 4. இளம்பிள்ளை வாதத்திற்குரிய சொட்டு மருந்து (1-2 மாதம் இடைவெளி விட்டு இரண்டு முறை) |
| 2. ஒன்பது முதல் பன்னிரண்டு மாதம் வரை | 1. தட்டம்மைக்கு எதிரான தடுப்பூசி |
| 3. பதினைந்து முதல் இருபத்து நான்கு மாதம் வரை | 1. முத்தடுப்பு ஊசி (மறுமுறை) |
| 4. ஐந்து வயது முதல் ஆறு வயது வரை | 1. தொண்டை அடைப்பான், ரண ஜன்னி தடுப்பூசி (மறுமுறை) |
| | 2. டைபாய்டு காய்ச்சலுக்கு தடுப்பூசி (1-2 மாதம் இடைவெளி விட்டு) |

✶ இத் தடுப்பு ஊசிகளை ஆரம்ப சுகாதார மையங்களிலிருந்து போட்டுக் கொள்ளலாம் என்பதை வலியுறுத்திச் சொல்லவும். நோய் வருமுன் காப்பதே சிறந்தது என வலியுறுத்திக் கூறவும்.

## பாடம் - 6

✶ இந்தப் பாடத்தின் மூலம் 32 எழுத்துகள் அறிமுகமாகி விடுகின்றன. அவை என்ன?

ல ல் லா லி லை லு லெ லே

பெ பே டெ டே செ சே மெ மே தெ தே

னெ னே வெ வே யெ யே ரெ ரே கெ கே, ளெ ளே ணெ ணே

✶ தலை சுற்றுகிறதா கொஞ்சம் இருங்கள்.

இவ்வளவு எழுத்துகளைப் பாடப் பகுதியில் சொல்லக் காணோமே என்று திகைக்க வேண்டாம்.

புள்ளி . (பாடம் -1) ா (பாடம்-1 இகரக் குறியீடு,ி (பாடம்-1, உகரக் குறியீடு ■ு (பாடம்-3, கு (பாடம்-4) து (பாடம்-5) ஐகாரக் குறியீடு ை (பாடம்-4), ஆகியவற்றை ஏற்கனவே கற்பித்திருக்கிறோம். இந்தப் பாடத்தில் செலவு, சேமிப்பு என்ற முக்கிய வார்த்தைகள் மூலம், ெ. ே என்ற குறியீடுகள் அறிமுகமாகின்றன.

ஆக ■், ■ா, ■ி, ■ு, ை■, கு, து, ெ■, ே■, ■ீ என்ற குறியீடுகளை இது வரை கற்பித்திருக்கிறோம். எனவே புது எழுத்து எது அறிமுகம் ஆனாலும் அந்த எழுத்தோடு இந்தக் குறியீடுகள் எல்லாவற்றையும் சேர்த்து நாம் கற்பிக்க வேண்டும்.

இந்தப் பாடத்தில் புதிதாக அறிமுகம் ஆகியுள்ள எழுத்து ல. இந்த எழுத்தோடு குறியீடுகளையும் சேர்த்து ல ல் லா லி லு லை லெ லே என்ற எழுத்து வரிசையைக் கற்பிக்கிறோம். இப்போது புரிகிறதா?

சரி! பெ பே டெ டே என்று 24 எழுத்துகளை வரிசையாக எழுதியிருக்கிறோமே! அது எதற்காக? இது வரை வந்த பாடங்களில் 12 உயிர் மெய்யெழுத்துகளைக் கற்பித்திருக்கிறோம்.

ப, ட, பாடம்1

ச, ம, த, ன, பாடம் 2

வ, ய, ர, ள, பாடம் 3

க, பாடம் 4

ண, பாடம் 5

புதிய குறியீடு எது வந்தாலும் அதை ஏற்கெனவே கற்பித்த உயிர் மெய்யெழுத்துகளோடு சேர்த்து கற்பிக்க வேண்டும். இந்தப் பாடத்தில் வந்துள்ள புதிய குறியீடு ெ, ே. எனவே தான்,

பெ பே டெ டே செ சே மெ மே தெ தே னெ னே

வெ வே யெ யே ரெ ரே கெ கே ளெ ளே ணெ ணே

என்ற வரிசையைக் கற்பிக்கிறோம். இவற்றைக் கரும்பலகையில் எழுதிப்போட்டு திரும்பத் திரும்ப வாசிக்கும் பயிற்சி தர வேண்டும். எழுத்துப் பயிற்சி தர வேண்டும். எழுத்துப் பயிற்சி தரும்போது லெ, யெ, ளெ, ரெ, ணெ ளே, ரே, ணே ஆகிய 9 எழுத்துகளுக்குப் பயிற்சி

அவசியமில்லை. சிலேட்டிலும், நோட்டிலும் எழுதும் பயிற்சி தரும்போது மேலே கூறிய எழுத்துகளையும் விட்டுவிடலாம்.

* இந்தப் பாடத்தில் வாக்கியங்களைக் கொண்ட சிறிய பாராவும் இடம் பெற்றுள்ளது. பொறுமையோடு, அவசரப்படாமல் இதைக் கற்பிக்க வேண்டும்.
* எண்கள் இரண்டு இலக்க கூட்டல் 50 வரை கொடுக்கப் பட்டுள்ளது.
* செலவைக் குறைத்து சேமிப்பைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை இப்பாடம் வலியுறுத்துகிறது.
* எண்ணறிவுப் பயிற்சி 38 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.
* கூடி நாம் பாடும் பாடல்:

டிக்! டிக்! கடிகாரம்
காலநேரம் காட்டுது!
டிக்! டிக்! பன்னிரண்டு!
கட்டு ஒண்ணு! உதிரி ரெண்டு!
டிக்! டிக்! அண்ணாச்சி!
குடிப்பதையே நிறுத்திக்க!
டிக்! டிக்! தங்கச்சி!
சேமிக்கவே பழகிக்க!
கணக்கு வழக்கு தெரிஞ்சுக்க!
கவனமாக இருந்துக்க!

## மதிப்பீடு-2

மதிப்பெண் விபரம் மொத்த மதிப்பெண் : 100

| | |
|---|---|
| 1. வேறுபாடு அறிந்து வாசித்தல் (8+12) | 20 |
| 2. சரியான எழுத்தை எழுதுதல் 4X5 | 20 |
| 3. வார்த்தைகளைக் கண்டு பிரித்து எழுதுதல் 4X5 | 20 |
| 4. பார்த்து எழுதுதல் 4X5 | 20 |
| 5. விடை காணவும் (கணக்கு) 4X5 | 20 |
| | 100 |

## பாடம் 7

* 33 எழுத்துகள் அறிமுகம் ஆகியுள்ளன.
* எழுத்துகளை வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

**உயிரெழுத்து.**

ஒ ஓ - 2

✶ உயிர் மெய்யெழுத்து

ந ற என்ற உயிர்மெய்யெழுத்துக்கள் அறிமுகமாகின்றன. ஏற்கெனவே அறுமுகமாகியுள்ள [illegible], ா, [illegible], [illegible], ை, ு, ூ, ெ, ே, என்ற ஒன்பது குறியீடுகளோடு இந்தப் பாடத்தில் அறிமுகமாகியுள்ள ஈ என்ற ஓசையின் குறியீடான [illegible] என்பதோடு சேர்த்து பத்துக் குறியீடுகளையும் ந, ற என்ற புதிய உயிர் மெய்யெழுத்துகளோடு இணைத்து எழுதிக் காட்ட வேண்டும்.

ந ந் நா நி நு நை நெ நே நீ

ற ற் றா றி று றை றெ றே றீ 18

ர புதிய குறியீடு ீ

ஏற்கெனவே கற்ற மெய்யெழுத்துக்கள் 12 - உடன் இந்த குறியீட்டைச் சேர்த்து எழுதுவோம்.

பீ, டீ சீ மீ தீ னீ வீ யீ ரீ கீ ணீ லீ ளீ 13

✶ ஆக மொத்தம் 33 எழுத்துகள்.

✶ முதலில் உயிரெழுத்துக்கள் ஒ ஓ - வை எழுதிப் போட்டு வாசிக்கப் பயிற்சி கொடுங்கள்.

✶ பின்னர் ீ என்ற குறியீட்டைச் சொல்லி

பீ டீ சீ மீ தீ னீ வீ யீ ரீ கீ னீ லீ ளீ

ஆகியவற்றை எழுதிப் போட்டு பயிற்சி கொடுங்கள்.

✶ அதன் பின்னர்

ந ற என்ற உயிர் மெய்யெழுத்துகளை எழுதிப் போட்டு அவற்றோடு குறியூடுகளை இணைத்து

ந ந் நா நி நை நு நெ நே நீ

ற ற் றா றி றை று றெ றே றீ

என்ற எழுத்துகளை எழுதிப் போட்டுப் பயிற்சி கொடுங்கள்.

✶ வாசிக்கும் பயிற்சி எல்லா எழுத்துகளுக்கும் கொடுங்கள். எழுதும் பயிற்சி தரும் போது றெ, றே, றீ, யீ, ரீ, லீ போன்ற எழுத்துகளைத் தவிர்க்கலாம்.

✶ ஓ என்ற நெடில் எழுத்துக்கு ஓடம், ஓவியம், ஓணான், ஓசை போன்ற சொற்களை எழுதிப் போட்டு கற்போருக்குப் பயிற்சி தரவும். அவசியம்.

✶ எண்ணறிவுப் பயிற்சியில் கழித்தல் கணக்கு கொடுத்துள்ளோம்.

✶ இப்பாடத்தின் முடிவில் நாம் கூட்டாகப் பாட வேண்டிய பாடல்:2

வீடு! நாடு! ஒன்று பாடு!

வேண்டாம்! சண்டை! விட்டுவிடு!

பிள்ளைகள் சண்டை யிட்டால்

யார் வந்து தடுப்பது?

பிள்ளைகள் சண்டையிட்டால்

பெரியவர்கள் தடுக்கணும்.
பெரியவர் சண்டை யிட்டால்
யார் வந்து தடுப்பது?
பெரியவர் சண்டையிட்டால்
ஊர் வந்து தடுக்கணும்
ஊருக்குள்ளே சண்டை வந்தால்
யார் வந்து தடுப்பது?
ஊருக்குள் சண்டை வராமல்
ஒற்றுமையாய் இருக்கணும்
வீடு! நாடு! ஒன்று பாடு!
வேண்டாம்! சண்டை! விட்டுவிடு!

## பாடம் -8

✶ பெண் குழந்தை அன்புச் செல்வம் ஆசைச் செல்வம் என்ற மூன்று முக்கிய வார்த்தைகள் தரப்பட்டுள்ளன.

✶ ழ அ ஆ என்று மூன்று கட்டம் போடப்பட்டுள்ளது.

✶ பாடப்பகுதியில்

ழ பழம் மழை குழாய் தமிழ்
அ அகழி அம்மா, அறிவு, என்று தரப்பட்டுள்ளது.
ஆ ஆசை ஆடு ஆறு என்று தரப்பட்டுள்ளது.

✶ இந்தப் பாடத்தில் 11 எழுத்துகளைக் கற்பிக்கிறோம்.

அ ஆ
ழ ழ் ழா ழி ழீ ழு ழெ ழே ழை

ழூ என்ற எழுத்து பாடத்தில் வராமல் பயிற்சியில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.

✶ வாசிக்கும் பயிற்சி எல்லா எழுத்துகளுக்கும் தரவேண்டும். எழுத்துப் பயிற்சி தரும்போது ழீ ழு ழெ ழே ஆகிய எழுத்துக்களை விட்டுவிடலாம்.

✶ நீண்ட பாராவைக் கற்பிக்கிறோம்.

✶ முன் எண், பின் எண், இடை எண்களைக் கற்பிக்கிறோம்.

✶ பயிற்சியில் 3,4 பயிற்சிகள் சற்றுக் கடினமானவை. நீங்கள் உதவ வேண்டும்.

✶ பக்கம் 52 இல் முன், பின், இடையிலுள்ள எண்களை அறியும் பயிற்சி தரப்பட்டுள்ளது.

பாடலுக்குப் பதிலாக ஒரு மாற்றத்திற்கு முழக்கங்களைக் கொடுத்துள்ளோம். இதை நீங்கள் சொல்லச் சொல்ல கற்போரைச் சொல்லச் செய்யுங்கள்.

வாருங்கள் வாருங்கள்
பெண்களே வாருங்கள்!
படிப்பதற்கு வாருங்கள்
பெருமைபெற வாருங்கள்!
படித்த பெண் குடும்பத்தைப்
பள்ளிக் கூடம் ஆக்குகிறாள்.
கருவிலே பெண் குழந்தையை
அழிக்கின்ற போக்கினை
மாற்றுவோம் மாற்றுவோம்!
கொடுப்போம்! கொடுப்போம்!
புத்தகங்கள் கொடுப்போம்!
களை எடுக்கும் கைகளில்
புத்தகங்கள் கொடுப்போம்!
விறகு சுமக்கும் கைகளில்
புத்தகங்கள் கொடுப்போம்!
சோறு போடும் கைகளில்
புத்தகங்கள் கொடுப்போம்!
உயர்த்துவோம்! உயர்த்துவோம்!
ஆணுக்கிணையாகப் பெண்களை,
உயர்த்துவோம்! உயர்த்துவோம்!
சொல்லுவோம்! சொல்லுவோம்!
ஆணும் பெண்ணும் சமமென்றே
சொல்லுவோம்! சொல்லுவோம்!
கற்போம்! கற்பிப்போம்! கற்போம்! கற்பிப்போம்!

## மதிப்பீடு-3

✶ மதிப்பெண் விவரம். மொத்த மதிப்பெண் : 100

| | |
|---|---|
| 1. வார்த்தைகளை வாசிக்க | 5 மதிப்பெண் |
| 2. வாக்கியங்களை வாசிக்க | 10 மதிப்பெண் |
| 3. பத்தியைப் படிக்க - 8, பதில் எழுத (3X2) - 6 மொத்தம் (பத்தியில் மூன்றாம் வரியில் உள்ள மக்கள் என்ற சொல்லை நீக்கிவிடவும்) | 14 மதிப்பெண் |
| 4. வார்த்தைகளைப் பார்த்து எழுத | 8 மதிப்பெண் |
| 5. சரியான இடைவெளி விட்டு எழுத | 18 மதிப்பெண் |
| 6. சொல்லச் சொல்ல எழுத 5X2 | 10 மதிப்பெண் |
| 7. வார்த்தையால் நிரப்பவும் $4X2^{1}/2$ | 10 மதிப்பெண் |
| 8. கூட்டல், கழித்தல் | - 5 மதிப்பெண் |
| 9. விடுபட்ட எண்கள் | -10 மதிப்பெண் |
| 10. நிரப்பவும் | -10 மதிப்பெண் |
| | 100 |

## நீங்கள் கற்றுக் கொள்ள...
## கற்றுக் கொடுக்க இப்பாடல்கள்!
## ஒளியை நாடி வாங்க

கவிஞர் வெற்றி நிலவன்

தொகையறா

கல்விக் கண் வேண்டி கலங்குகின்ற மனிதருக்குக்
கற்றவரும் தேர் இழுத்து
கண் திறக்கும் புனித விழா - இனிய
அறிவொளித் திருவிழா.

பாடல்

ஊர் கூடுதே ஒளியை நாடி
வாங்க வாங்க வாங்க அறிவொளித்
தேரோடுதே வடத்தப் பிடிக்கணும்
வாங்க வாங்க நீங்க.

பேரு எழுதிப் பழகிக் கொண்டாலே
ஊரு உலகம் மதிக்காதா...
வெக்கப்பட்டு வீட்டிலிருந்தா...
சின்னப் பிள்ளையும் சிரிக்காதா...
யாரு சொல்லித் தந்தாலென்ன ஆனா ஆவன்னா - நீங்க
பேரு எழுதிப் பழக வேணும் அண்ணா வாங்கண்ணா...

- ஊர்...

காலத்தோடு சேர்ந்தவங்கெல்லாம்
கையெழுத்துப் போடுறாங்க...
கண்ணில் தெரியும் செயல்களுக்கெல்லாம்
காரணத்தைத் தேடுறாங்க...
சேர்ந்து நிக்க யோசனை செஞ்சா யாருக்கு லாபமுங்க-இப்போ
சோர்ந்து நிக்க நேரம் இல்ல படிக்க வாருங்க.

- ஊர்...

எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டாலே
எந்த ஊரும் நம்மூரு...
இணங்கிப் பழக மனமிருந்தாலே
எந்த நாடும் நம்நாடு.
ஊருகூடிப் பேதம் இன்றிப் படிக்குதுங்க ஒண்ணா - இன்னும்
ஒதுங்கிச் சிலபேர் தயங்குவதாலே அடையும் பயனென்னா.

- ஊர்...

## அந்த நாளுல சின்ன வயசுல!

அந்த நாளுல சின்ன வயசுல
பள்ளிக் கூடம் நானும் போகல
அப்பாவும் படிக்கல ஆத்தாளும் படிக்கல
படிப்பின் அவசியம் தெரியல...
வெவரஞ் சொல்ல ஒரு ஆளுமில்ல
வெளையாட்டா காலமும் போயிருச்சே..... - அந்த நாளுல...

கழனிக் காட்டுல கால்பதியும் சேத்துல
களையெடுப்பா எங்க ஆத்தா
கருவக் காட்டுல காலில் தச்ச முள்ளோட
வெறகு பெறக்கும் இந்தப் பாப்பா... - அந்த நாளுல...

கம்மங் கருதறுக்கக் கக்கத்துல கடாப்பெட்டி
காடு மேடுலையும் ஆத்தா...

அழுகுற தங்கச்சி ஆராரோ பாடிக்கிட்டுத்
தூக்கிச் சொமப்பா இந்தப் பாப்பா... - 'அந்த நாளுல...

சிட்டுக் குருவிபோல சின்னஞ் சிறுசெல்லாம்
பள்ளிக் கூடம் போறதப் பாப்பா...
தெருவோர திண்ணையில கால்மடக்கி ஒக்காந்து
தீக்குச்சி அடுக்குமிந்தப் பாப்பா...
பள்ளிக்கூட மணியடிக்கப் படபடன்னு மனசடிக்கக்
கண்ணத்துல கண்ணீரு சரியும் - அவ
கவுனுத் துணிகூட நனையும் - அந்த நாளுல...

வெவரம் தெரிஞ்சபோது வெவரிதம் புரிஞ்சபோது
வேதனை நானும் பட்டேன்
தெய்வ் சோதனையொன்னு நெனைச்சேன்...
படிச்ச நபரக் கண்டா மனசு குன்னிப் போகும்
பயத்துல தேகங்கூட நடுங்கும்.
வெவஸ்தை கெட்டவளா வெக்கம் புடுங்கித் திங்க
தெருவோரம் ஒதுங்கிடச் சொல்லும் - அந்த நாளுல...

இப்படி இருந்தவள என்னைப் போலப் பலபேர
எழுதப் படிக்க வச்ச இயக்கம்
இப்ப ஏகப்பட்ட பேருக்கு ஏற்பட்டுப் போச்சு
அறிவொளி என்னும் ஒரு மயக்கம்.

ஒறவும் புதுசாச்சு ஒலகம் புதுசாச்சு
ஒவ்வொரு பொருளுமே புதுசாச்சு
மனசுல மத்தாப்பு மொகத்துல கொந்தளிப்பு - கட்டிச்
சோளக் கருதப் போல ஒரு வெறப்பு

ஆணும் பெண்ணுமாய் அவசரக் கோலமாய்
அறிவொளி வகுப்புக்குப் போறோம் - நாங்க
அறிவொளி வகுப்புக்குப் போறோம்.

வழிகாட்டி

# பெண்ணே உன் வாழ்க்கையிலே.....

கவிஞர் வெற்றி வளவன்

### தொகையறா

பெண்ணென்றால் பேயிரங்கும்
என்றதய்யா ஊரு
பெண்ணை ஒரு மனுசியென்று
ஏற்றவர்கள் யாரு?

காவியங்கள் நூறுகண்டு'
களிப்படைந்த நாடு.
உள்ளபடி பெண்ணை இங்கு
உரைத்ததுண்டோ கூறு.

### பல்லவி

பெண்ணே உன் வாழ்க்கையிலே
இருக்குதொரு வழக்கு
வருகின்ற நாட்களில் நீ
தீர்க்க வேண்டிய கணக்கு.
கல்லாமை இருளிலே
தள்ளாடுவது ஏனம்மா?
அறிவொளியின் தீபம் கண்டு
விடியுமுந்தன் வாழ்வம்மா.

### அனுபல்லவி

தகப்பனுக்குக் கஞ்சிக் கலயம்
தூக்கி நடந்தியே - எருச்
சாணி பொறுக்க நாருப்பெட்டி
சுமக்கத் துணிஞ்சியே

அரி வாளோடு கருவக் காட்டில்
அலைந்து திரிந்தியே - தினம்
கல்லுமண்ணு சுமக்கப் பிரம்புக்
கூடை எடுத்தியே

இளங்குருத்தில் எத்தனையோ
பொறுப்பைச் சுமந்தியே - ஒரு
ஏடெடுத்துப் படிக்க மட்டும்
மறந்து போனியே! - பெண்ணே உன்

பச்சப் பயிரை பறிச்சபோது
பாதி உசுருதான் - நீ
நட்ட பிறகு வந்ததம்மா
மீதி உசுரெல்லாம்

கருவ மரத்துத் தொட்டிலிலே
கண்கள் இருந்ததே.
கைவிரலில் கண் முளைச்சு
களை எடுத்ததே.
காட்டு வேலை வீட்டு வேலை
களச்ச தில்லையே - ஒரு
கடுதாசி வந்தபோது
மலச்சு நின்னியே ! - பெண்ணே உன்

## படிச்சு முடிச்சு களைச்சவரே....

- கவிஞர் பிரளயன்

படிச்சு முடிச்சுக் களச்சவரே பெரியண்ணே - சனங்க
படிக்க என்ன செஞ்சீங்க சொல்லண்ணே
படிக்காதவன் பலபேரு நாட்டுல - அதுக்கு
பதிலைத் தேடு நீ படிச்ச ஏட்டுலே.

மூனும் மூனும் ஆறு என்றால் போதுமா?
ஆறை நூறு ஆக்கும் வழி வேணாமா?
உங்க கிணற்றில் ஊற்றெடுத்தால் போதுமா?
ஊர்க்குளத்தில் நீர்நிறைய வேணாமா?
நமக்கென்ன ஆச்சதுன்னு ஒதுங்குறே - நாட்டுலே
நல்ல காரியம் நடக்கும் போது பதுங்குறே. - படிச்சு முடிச்சு

ஆளுபத்துப் பேருக்கு நீ சொல்லித்தர கசக்குதா
அடுத்தவன் கிட்டே போறதுக்கு உன் படிப்பு மறுக்குதா?
போகாத ஊருக்கு நீ வழி என்னான்னு கேக்குறே.
போறவன் வாறவன் தலைமேலயே ஏறி நடக்கப் பாக்குறே.
நொப்புரானே சொல்லுறேன் நான் ஒரே ஒரு வார்த்தை - நீ
இப்பக்கூட முழிக்கலேன்னா வித்துருவான் நாட்டை - படிச்சு முடிச்சு

அதுக்கும் இதுக்கும் கணக்கு வழக்கு பாக்குறே - நாட்டுலே
படிக்காதவன் கணக்கைச் சொன்னா முழிக்கிறே - இந்த
பாவத்துக்கு பொறுப்பை நீயும் சுமக்கிறே - இதை
எடுத்துச் சொன்னா எங்களை ஏனோ மொறைக்கிறே.
ஊருமானம் காக்க வேணும் புறப்படு - நாடு
உருப்படனும் நீயும் தெருவில் இறங்கிடு. - படிச்சு முடிச்சு

## எண்ணும் எழுத்தும் அறிந்தால்

பாடல் : பொன். கருப்பையா, புதுக்கோட்டை.

உழைக்கின்ற மனிதா நீ
உயர்வாவது எப்போது
உனக்குள்ள அறியாமை மறைந்தாலே அப்போது
கல்வியின்றி கண்ணிழந்து தாழ்ந்து நிற்கும் நிலைமாற்று
எண்ணும் எழுத்தும் அறிந்தால்
இந்த மண்ணில் வாழ்க்கையே எளிதாம் (2)

தையர...தையர...தா தர...தையர...தையர...தா (தாழ்குரல்)
தையர...தையர...தா தர...தையர...தையர...தா (உயர்குரல்)

கல்லுடைக்கும்(ஓ) தொழிலாளி (நீ)
கையிலெடு (த்துவிடு) புத்தகத்தை
களைப்பு உனக்கு நீங்கி விடும்
கணக்கு வழக்கும் புரிந்து விடும் (எண்ணும்)

சாட்டைக் குச்சியால் மாட்டைத் தூண்டியே
வண்டுஓட்டிடும் நண்பா (2)
உன் அறிவை தூண்டிட அருமை எழுதுகோலை
கையில் எடுப்பதும் தீதா (எண்ணும்)

மண்ணை பிசைந்துமே பாண்டங்கள் செய்யும்
மகிமைகள் கொண்ட மனிதா (2)
உயர் மாந்தனாக நீ மண்ணில் நிமிரவே
படிக்க வேண்டும் நீ வா...வா (2) (எண்ணும்)

வலையில் மீன்பிடித்து வாழும் மக்களுக்கு
வகையாய் வழங்கும் நண்பா உன் (2)
வாழ்வில் ஒளியேற்ற வந்த இயக்கமே
அறிவொளி அழைக்குது வா...வா (2) (எண்ணும் 4)

## சரஸ்வதி

(தமிழ்நாடு & பாண்டி அறிவியல் இயக்க நண்பர்கள்)

நின்னுகேளு நின்னுகேளு
கொஞ்ச நேரந்தான்
நான் சொல்லப் போற கதையெல்லாம்
பெண்ணைப் பத்திதான்
கல்விக்கரசி சரஸ்வதியோர்
பெண் தெய்வம்தான்

கல்விக்கும் பெண்ணுக்கும்
காத தூரந்தான்

சொல்லப்போறேன் சொல்லப்போறேன்
பெண்ணைப் பத்திதான்
நின்னுகேளு, நின்னுகேளு
கொஞ்ச நேரம்தான்

தானானே தானானே தன தான தனம் தன தானானே
தானானே தானானே தன தான தனம் தன தானானே
தனம் தனம் தன தானா தன தான தனம்தன தானா
தனம் தனம் தன தானா தன தான தனம்தன தானா

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அவள் வயலில் உழைக்கும் உழைப்பாளி
நாற்று நடுவாள் களைபறிப்பாள் அவள் சேற்றில் உழலும் தொழிலாளி
உழவின் உழைப்பில் பாதி அவள் மனிதர்களில் சரிபாதி (தானானே...)

இருண்ட வீட்டில் விளக்கேற்றி ஒளியை தருவாள் பெண்ணவளே
அழுத பிள்ளையை வாரியணைத்து பாலும் தருவாள் தாய் அவளே
மாமன் மாமி கவலை தீர்க்கும் அவளே மருமகளே (தானானே...)

இன்னும் கேளு......
காலம் காலமாய் அவள் மேனியிலே
படிந்து கிடக்குது உழைப்பின் புழுதி
வழக்குகள் வெல்லும் வழக்கறிஞர்
பிணிகளை தீர்க்கும் மருத்துவச்சி
வானில் பறப்பாள்...வெளியில் நடப்பாள்...
நாளை கனவுகளில் நீந்திச் செல்வாள்
அற்புதங்களை மேலும் மேலும் அற்புதமாக்கி
பேரெழிலுக்கு எழில் சேர்த்து

கலைகள் படைக்கும் படைப்பாளி - அவள்
என்றும் உழைக்கும் உழைப்பாளி (தானானே...)

எழுதப் படிக்கத் தெரிந்த பெண்ணே
விதியை மாற்றலாம்
தன் விதியை மாற்றலாம்
எழுதப் படிக்க தெரிந்த பெண்ணே
சமமாய் நிற்கலாம்
சரிசமமாய் நிற்கலாம்
எழுதப் படிக்கத் தெரிந்த பெண்ணை
அடிமை கொள்ள முடியாது
அடிமை கொள்ள முடியாது
கோரச் சமூகக் கொடுமை கண்டு
சகித்து நிற்க மாட்டாள் அவள்
சகித்து நிற்க மாட்டாள்

படிப்பதற்கு உரிமை கேட்டு
புறப்பட்டாளே பெண்
புறப்பட்டாளே பெண்
புறப்பட்டாளே பெண்

## வீதியிலே... வீதியிலே...

வீதியிலே வீதியிலே ஊர்வலம் வருகின்றோம்
எழுத்தறிவைப் போதிக்க எழுந்தே வருகின்றோம்.
கல்லாமை இருளகற்ற அறிவொளி இயக்கம் வருவதனால்
இன்னுமொரு சுதந்திரப்போர் நாமும் நடத்த இருப்பதனால்
இன்னுமொரு சுதந்திரப்போர் நாமும் நடத்த இருப்பதனால்

கோவில்களா கல்விச் சாலைகளா - எங்கள்
பாரதி கண்டது கனவுகளா
(குழு) கனவுகளா... கனவுகளா...
உன் இடது பெருவிரலில் இன்னும் அழியாத மை எதற்கு
(குழு) மைஎதற்கு... மைஎதற்கு...
மண்ணிலும் மலையிலும் ஆற்றிலும் காற்றிலும்
உன் வியர்வை மணக்குதடா
படித்த பாரதம் என்பது ஒன்றே
அறிவொளி இயக்கத்தின் லட்சியமே. (வீதி)

உழைப்பென்னும் உளி கொண்டே - இந்த
உலகினை அழகு செய்பவனே
(குழு) செய்பவனே... செய்பவனே...
துயரம் சுமந்தே உன்முதுகு கூன் விழுந்தே போனதடா
(குழு) போனதடா... போனதடா...
எலும்புக்குள்ளே எஃகைப் பாய்ச்சும்
அறிவொளி இயக்கம் வருகுதடா
படித்த பாரதம் என்பது ஒன்றே
அறிவொளி இயக்கத்தின் லட்சியமே (வீதி)

பழம்பெருமை பாருக்குள்ளே
பரம்பரையாய் வாழ்பவனே
(குழு) வாழ்பவனே... வாழ்பவனே...
சாதிமத சிறையினிலே
ஆயுள் கைதியாய் ஆனவனே
(குழு) ஆனவனே... ஆனவனே...
தலைவிதி என்னும் தத்துவம் ஒன்று
உலகினில் என்றும் கிடையாது
அறிவொளி இயக்கத்தில் ஐக்கியமாவோம்
அதுவொரு விடுதலை வேள்வியடா (வீதி)

## எங்கள் தேசம்

எங்கள் தேசம் இந்திய தேசம்
வாழ்க வாழ்க வாழ்கவே
இந்து முஸ்லீம் கிறிஸ்துவர்கள்
எங்களின் சகோதரர்கள்
எங்களின் சகோதரர்கள் (எங்)

வேறு வேறு வண்ணப் பூக்கள்
சேர்ந்த வாச மாலை நாங்கள்
வண்ணம் வேறு வேறென்றாலும்
வாசம் என்றும் ஒன்றுதான் (எங்)

சிந்து கங்கை பிரம்மபுத்திரா
கிருஷ்ணா காவேரி
சென்று சேரும் கடலில் என்றும்
நீரின் தன்மை ஒன்றுதான் (எங்)

சீக்கிய சகோதரர்கள்
சிந்தும் இரத்தம் இந்திய ரத்தம்
பன்னீர் தந்த காஷ்மீர் ரோஜா
கண்ணீர் சிந்தும் காட்சி வேண்டாம். (எங்)

பேசும் மொழியும் வாழுமிடமும்
வேறு வேறு ஆனால் என்ன
பாசம் பண்பும் பசியும் உணர்வும்
தேசம் முழுதும் ஒன்றுதான் (எங்)

## எல்லாக் குழந்தைகளும்

எல்லாக் குழந்தைகளும்
பள்ளிக் கூடம் போகனும்
பத்தாண்டு கல்விதனை
நிச்சயம் படிச்சு ஆகனும் (எல்லா)

ஆரம்பக் கல்வி நமக்கு
அஸ்திவாரம் அல்லவா (2)
அணையா கல்வி தீபம்
ஏற்ற ஒன்று கூடிவா
கள்ளம் கபடமில்லா
பிள்ளை நாட்டின் முதலீடு

இதனைக் கருத்தில் கொண்டு
உனக்குள்ளே போராடு (எல்லா)

ஓட்டலிலே மேசை துடைக்கும்
சின்ன அரும்பைப் பாரு
நீ கொஞ்சுகின்ற
பிஞ்சுமுகம் போலில்லையா கூறு
காடுகரையில் விறகொடித்து
வதங்குது ஒரு பூவு
உன் கனவுகளில் சிரிக்கும்
அந்த கண்மணியா பாரு
முல்லை அரும்பாகி
முழுப்பூவாய் மாறுமுன்னே
தொல்லை துரத்துதம்மா
வளர்பிறையும் தேயுதம்மா (எல்லா)

மார்பினிலும் மடியினிலும் போட்டு
வளர்த்த மழலை
ஒரு சபைதனிலே உயர்வதில்தான்
பெற்றவர்க்குப் பெருமை
மாண்புகளை ஈன்றெடுக்கும்
மாணவனைக் கண்டால்
இந்த மரியாதைக்குரியவர் ஓர்
ஆசிரியர் - என்பான்
மண்ணகத்தில் மனிதனாக
உயர்வது அவன் உரிமையடா
மாதா பிதா குரு மூவரும்
வழிகாட்டனுமடா (எல்லா)

## குறிஞ்சி மலைத்தேனே

குறிஞ்சி மலைத்தேனே
கொண்டாடும் சந்தனமே
சரிஞ்சி படுத்திருக்கும்
செண்பகமே கண்ணுறங்கு (2) (குறிஞ்சி)

கண்ணுறங்கும் ராசாவே
கால் முளைச்ச பின்னாலே
ஒன்னுரெண்டு கத்துக்கொள்ள
ஓடவேணும் கண்ணுறங்கு (2) (குறிஞ்சி)

ஆத்தா கத்துக்கல
அப்பன் கூட படிக்கவில்லை

பூத்த புது ரோசாவே
பொல்லாங்க தீர்த்திடடா (2) (ஓ...ஆரிரரி)

உச்சத்து நிலாவே நீ
ஒழுங்கா படிக்க வேணும்
அச்சத்த விட்டுப்புட்டு
ஆளாகி நடக்க வேணும். (2) (குறிஞ்சி)

நட்சத்திர பூப்பறிச்சி
நாதஸ்வரம் மேளம் வச்சு
அட்சரங்கள் கத்துக்கொள்ள
அனுப்பிடுவேன் கண்ணுறங்கு (2) (ஓ...ஆரிரரி)

## சந்திரன் மேல்

இது சந்திரன் மேல காலவச்ச காலம்
இன்னும் கைநாட்டு வைக்கிறது அலங்கோலம்
பாதிக்கு மேல நம்ம நாட்டுல படிக்கல - அவங்க
பல வழியிலும் ஏமாறுவது சகிக்கல. (இது சந்திரன்)

காருல ஏறி ஊருக்குப்போக பாக்குற
இது எங்க போற பஸ்சுன்னுதான் கேக்குற
கை நிறைய பணமிருந்தும்
கழுத்துலதான் நகையிருந்தும்
கண்ணிருந்தும் குருடன் போல நிக்கிற (இது சந்திரன்)

ஆடுமாடு மேச்சா மட்டும் போதுமா
நீயும் ஆனா, ஆவன்னா தெரிஞ்சிக்கவும் வேணாமா
நாட்டு நடப்புகளை நல்லதொரு விசயங்களை
நீயாக தெரிந்து கொள்ள வேணாமா (இது சந்திரன்)

பணமிருந்தா போதுமின்னு நினைக்கிறே
சாதி சனங்க துணைக்கு இருக்குதுன்னு பாக்குறே
பாதுகாத்த பணமும் நம்பி இருந்த சனமும்
படிப்பில்லாட்டி பயனில்லாம போயிடும் - ஐயா
படிப்பில்லாட்டி பயனில்லாம போயிடும் (இது சந்திரன்)

## ஒண்ணுபோலவா இருக்கோம்

- பிரளயன்

ஒண்ணுபோலவா இருக்கோம்...ஆனா
ஒண்ணாத் தானே இருக்கோம்
கருப்பா இருக்கோம் வெளுப்பா இருக்கோம்
கருப்பும் வெளுப்பும் கலந்துமிருக்கோம்.
அப்படியிருக்கோம் இப்படியிருக்கோம்
ஆளுக்கொரு தினுசா இருக்கோம். (ஒண்ணுபோலவா)

உனக்கும் எனக்கும் இடையிலேவொரு சுவரையெழுப்பும் சாதி - அதை
உடைத்தெறிய மனம்வராமல் போனதேன் நீ யோசி!
பிறப்பிலுயர்வு தாழ்வு சொல்லுவது பிணத்தை தின்னும் நீதி - அதை
மிதித்து மண்ணில் புதைத்திடாமல் ஒழிந்திடுமா சாதி!
(ஒண்ணுபோலவா)

பலவிதமா இருப்பது நம்ம பரம்பரை கண்ட காட்சி - அதை
ஒரு விதமா மறுக்கிறாரே யாரை ஏய்க்கும் சூழ்ச்சி...
வலுத்தவர்கள் வகுத்ததெல்லாம் வேதமென்று ஆச்சு வீணா
உசத்தி தாழ்த்தி பேசி நாடு உருப்படாமல் போச்சு... (ஒண்ணுபோலவா)

சாதி நூறு சமயம் நூறு இருந்ததுதான் சரித்திரம் - அந்த
சரித்திரத்தைப் புரட்டி நாட்டில் தூண்டி விட்டார் வெறித்தனம்
தீயெரியுது பகை வளருது எங்கும் கோரநர்த்தனம் - அந்த
நெருப்பையணைக்க நீரையெடுத்து புறப்படு நீ இக்கணம்
(ஒண்ணுபோலவா)

நூறு நூறு ஊற்று ஓடை நதிகளாக மாறும் - அந்த
நதிகளெல்லாம் முடிவில் ஒரு கடலினைத்தான் சேரும்
எத்தனையோ வாழ்முறைகள் இந்த மண்ணில் ஊறும் - அந்த
ஊற்று ஊறிப் பெருக்கெடுத்து ஜன சமுத்திரமாகும்.

## காலம் மாறும்

பாடல் புதுகை வெற்றிநிலவன்

அறியாமை என்பது ஒரு நோயல்லவா-நம்
தேசத்தாயை ஆட்டும் கொடிய பேயல்லவா-இதை
ஓட்டவேண்டும் நண்பர்களே ஒன்று சேருங்கள்-இது
இரண்டாம் சுதந்திரப்போர் வென்று வாருங்கள்

காலம் மாறும் மாறுமுன்னா மாறுமா-ஒரு
கையெழுத்துப் போடத் தெரியல (2)
கவலை தீரும் தீருமுன்னா தீருமா-ஒரு
கடுதாசி படிக்க முடியல. (2)

ஏரு ஓட்டி நாத்துப் பறிக்கும் வலிய கரங்களே
எழுத்தறிவு தீபமதைக் கையில் எடுங்களே (2)
களையெடுத்துச் சோறுபோடும் வளையல் கரங்களே
கல்லாமை இருளோட்ட பண்பாடுங்களே... (2) (காலம்)

வீசும் உரங்களிலே விஞ்ஞானமுண்டு தெரியுமா
விவரம் அறிந்துகொள்ள எழுதப் படிக்க வேணாமா (2)
வாழ்நாள் முழுவதிலும் வண்டி மசையைத் தேடணுமா
என்றுமே குழந்தையாக இன்னொரு கையை நாடணுமா (2) (காலம்)

ஆதி மனிதன் வாழ்வையெண்ணி அதிலிருந்தே வேறுபடு
ஆறாமறிவை நீயுணர்ந்தே எழுதுகோலைக் கையிலெடு (2)
பெரிய பெரிய விஷயமிருக்கு பேனாசிந்தும் மையிலே
எழுதப்படிக்கத் தெரிஞ்சுக்கிட்டா ஏமாற இனி தேவையில்லை. (2)
(காலம்)

இது இன்றைய நிலை அறிவொளிக்குப் பிறகு... (வசனம்)

காலம் மாறும் மாறுமுன்னா மாறுமே-இப்ப
கையெழுத்து போடத் தெரியுமே
கவலைதீரும் தீருமுன்னா தீருமே-இனி
கடுதாசி படிக்க முடியுமே (4 வரியும் திரும்ப 2 முறை)

## தந்தானா தாளம்

(பாடல்: சென்னை வெற்றிவளவன்)

ஏ!! தந்தனானே தந்தனானே
தந்தனானே தந்தனானே
தந்தனானே தந்தனானே
தந்தனானே தந்தனானே

தந்தானா தாளம் போடுங்க
ஏ தங்கமே தங்கம்
எழுதப் படிக்க எழுந்து வாருங்க (2)

ஏ! நம்ம பேர நாம எழுத
எழுத்துக் கூட்டி படிச்சி பழக
காலம் இருக்கு நேரம் இருக்கு
கெழக்கு வாசல் வெளுத்துகிடக்கு (தந்தனா)

ஏ! ஊட்டப் பாரு ஊரப் பாரு
ஆட்டம் போடும் உலகம் பாரு
மனுசன் சிந்தும் வேர்வையாலே
மண்ணுக்கெல்லாம் வாசம் பாரு (தந்தனா)

கண்ணைப்போல மண்ணைக் காத்தோம்
ராவுபகலா ஒழைச்சு போட்டோம்
உழைப்புக்கேத்த கூலி கூட
கணக்குப் பார்க்க தவறிப்போனோம் (தந்தனா)

ஏ! இன்னும் காலம் இருக்கு சாமி
உள்ளங்காலில் உனது பூமி
நம்ம வேர்வை தூசிக்குள்ளே
பெருமை அறிய படிக்க வா நீ (தந்தனா)

ஏ! காலம் தந்த கலப்பையாட்டம்
எழுத்துக் கூட ஆயுதந்தான்
ஒத்துமையா இருக்கணுன்னா
புத்தகத்தை நண்பனாக்கு (தந்தனா)

## படிபடி அண்ணே படிபடி

**(தமிழ்நாடு & பாண்டி அறிவியல் இயக்கக் கவிஞர்கள்)**

படிபடி அண்ணே படிபடி
அக்கா நீயும் படிபடி
ஒன்றாகவே நன்றாகவே வென்றாகவே
ஒன்றாகவே நன்றாகவே வென்றாகவே (ஒன்றாகவே....)

ஆனா ஆவன்னா நீ படி
உன்னுள் சுடரும் தீப ஒளி
இருக்குது காலம் நீ படி
உன்னுள் சுடரும் தீப ஒளி

க...ங...ச நீ படிபடி..... ஆனா
அது போதாதின்னும் தேடிப்படி
தேடித் துருவி தெரிந்து கொள்
தேடித் துருவி தெரிஞ்க்கோ
ஒவ்வொன்றையும் நீ... தெரிந்து கொள்! (2)

புத்தகம் கையில் எடுத்து விடு (புத்தகம்...)
அதுவே உன் போர் வாள்

உன்னுள் சுடரும் தீப ஒளி (3)
பஞ்சமரே நீ படி (2)
சிறைப்பட்டவனே நீ படி (2)

அடுக்களை உழலும் பெண்ணே
நீ படி நீயே படி
ஓ... தாத்தா நீ படி (2)

புத்தகம் கையில் எடுத்துவிடு (புத்தகம்)
அதுவே உன் போர் வாள்
உன்னுள் சுடரும் தீப ஒளி (3)

வீடில்லாமல் அலைபவனே
உன் தர்மத்தை நீயே உருவாக்கு
அதை உனக்கெனவே நீ உருவாக்கு
குண்டு சட்டியின் குதிரைக்காரா
ஒளியைத் தேடி வெளியே வா

பட்டினி கிடக்கும் மனிதா நீ
உனக்கொரு தத்துவம் வென்று எடு
அதுதான் உனக்கு ஆயுதம் - அதுவே
உன் போர் வாளாகும்.

புத்தகம் கையில் எடுத்துவிடு
அதுவே உன் போர் வாள்
உன்னுள் சுடரும் தீப ஒளி (3)

அஞ்சாதே நீ தம்பி
தட்டி கேட்கத் தயங்காதே
மூடத் தனத்தின் வலையில்
தம்பி என்றும் சிக்காதே

வசனம்:

கற்க கசடற நீ கல்லாத எதுவும்
நில்லாது உன்னிடம்
பழைய கணக்குகளை கேள்வி தொடு
நீ தீர்க்க வேண்டிய கணக்கு அது

ஒவ்வொரு பொருளையும்
விரல் சுட்டிக் கேளு
ஏன் வந்தது? எப்படி வந்தது?
எங்கிருந்து வந்தது?

எதனால் வந்தது?
உன்னுள் சுடரும் தீப ஒளி (3)

வசனம்:

புத்தகம் கையில் எடுத்துவிடு
அதுவே உன் போர்வாள்
உன்னுள் சுடரும் தீப ஒளி (3)

## சைக்கிள் ஓட்டணும்

(பாடல்: நா. முத்துபாஸ்கரன், புதுக்கோட்டை.)

சைக்கிள் ஓட்டக் கத்துக்கணும் தங்கச்சி-வாழ்க்கை
சக்கரத்தை சுத்திவிடு தங்கச்சி!

(இப்போ சைக்கிள்-2)

அங்கேபாரு சின்னத்தம்பி அழகழகா ஓட்டிவாரான்
அவனுக்கு நீ இளைச்சவளா தங்கச்சி-அந்த
சின்னத்தம்பி ஓட்டும்போது சிங்காரமா நீயும்ஓட்ட
சீக்கிரமா கத்துக்கணும் தங்கச்சி

(அப்படி... சைக்கிள்-2)

காரு கப்பல் விமானத்தை கன்னிப்பொண்ணுக ஓட்டுறாக
ஊருக்குள்ள வந்துபாரு தங்கச்சி!-இந்தக்

காலத்தோட நீயும் சேர்ந்து கலந்துவளர வேணுமுன்னா
வேகமாநீ சைக்கிள் கத்துக்க தங்கச்சி!

(அப்படி... சைக்கிள்-2)

புருசன் ஓட்டிப்போக பின்னால் பொண்ணுகளெல்லாம் உட்காந்திருக்க
போனதெல்லாம் பழையகதை தங்கச்சி-இப்ப

பொண்ணுக ளெல்லாம் சைக்கிள் ஓட்ட புருஷன்காரன் பின்னாலிருக்க
புதியகதையை நீ நடத்து தங்கச்சி

(அப்ப்டி...சைக்கிள்-4)

## இன்னும் தயக்கமா?

தொகையறா

நாளைத்தலைவர்களாய் மாறவேண்டிய உங்களுக்கு
காலம் இன்னும் கடந்திடவில்லை

நீங்கள் படிக்கணும் நீங்கள் படிக்கணும்
அகர முதல எழுத்தெல்லாம்
பால பாடங்கள் படிக்கணும்
முடியாது போயினும் முயன்றே படிக்கணும்

பாடல்

இன்னும் தயக்கமா...இன்றே தொடங்குவீர்
எல்லாம் நீங்க படிக்கணும்...
தயாராகணும் இப்பொழுதே
மாபெரும் சக்தியாய் மாறிடவே...

நாடு கடத்தப் பட்டவரே
சிறையில் அடைக்கப்பட்டவரே
அடுப்பங்கரையில் அனலில் பொசிங்கி
ஆயுளைக் கழிக்கும் மாதர்களே
வாங்கிய பென்ஷனில் நாட்களை எண்ணும்
வயோதிகப் பெரியோரே (இன்னும் தயக்கமா...)

படுக்கவும் இடமில்லாப் பாவங்களே
பனியில்... மழையில்... துயில்வோரே
பள்ளிக் கூடத்தையும் விஞ்ஞானத்தையும்
தேடிச் செல்லணும் தோழர்களே

பட்டினி கிடக்கும் மனிதா நீ
புத்தகம் கையில் எடுத்து விடு
புத்தொரு ஆயுதமாயிடும் உனக்கது
புத்தகம் கையில் எடுத்து விடு (இன்னும் தயக்கமா...)

ஏன்... என்று கேட்கத் தயங்காதிருந்திடு
மூடப்பழக்கத்தைத் தோண்டிப் புதைத்திடு
நீங்கள் தானாய்ப் படிக்காமல்...
ஒன்றும் நடக்காது தோழர்களே

ஒவ்வொரு பொருளையும் தொட்டு... தொட்டு...
விரல் தொட்டு... தொட்டு...
இது எப்படி வந்தது என்றே கேளுங்க (இன்னும் தயக்கமா...)

## மரிக்கொழுந்து

மரிக்கொழுந்து மல்லிகை முல்லை
பன்னீர் புஷ்பம் சிவந்த ரோஜா
கோர்த்துக் கட்டிய பூச்சரம் போல

எல்லோரும் ஒண்ணு சேருங்க. சேர்ந்து நாங்க
சொல்லப்போற கதையைக் கேளுங்க.

மொட்டரும்பும் நேரத்திலே கற்றறியும் காலத்திலே
பிள்ளைப் பருவமிழந்து
பிள்ளைகள் இங்கே தொல்லைப்படும் கதையைக் கேளுங்க
ஆத்து மணலுமில்ல அங்கே கட்டிய வீடுமில்லே
ஆனாலும் உடையுதுங்க-பிள்ளைகளோட
கனவெல்லாம் கலையுதுங்க (எல்லோரும்)

பல்லுக்கு மெதுவா இங்கோ பணியாரம் கேட்கையிலே
பாராங்கல்லைக் கொடுப்பதா - பாடதிட்டம்ன்னு
பாராங்கல்லைக் கொடுப்பதா
கண்ணி வைத்துப் பிடிப்பதற்கு பிள்ளைகள் பறவையல்ல...
பேசும் பொற்சித்திரமடா - நாளை இந்த
தேசத்தின் பொக்கிஷமடா
இதை உணர்வது கடமையடா - நீயும்
உணர்வது கடமையடா (எல்லோரும்)

பள்ளிக்கூடம் செல்லும்பெண்ணைத் தொட்டிலுக்கு காவல் வைத்து
பட்டியிலே கட்டி வைப்பதா - அவள் கனவில்
வெந்நீரைக் கொட்டி வைப்பதா
வேடன் விரித்த வலையோடு பறந்த கதை
இங்கேயும் நடக்குமடா - அவள் சிறகை
அசைத்துப் பறப்பாளடா - உரிமையினை
கேட்டுக் கொதிப்பாளடா (மரிக்கொழுந்து)

முன்னோக்கிச் செல்லுகின்ற காலத்தின் சக்கரத்தை
பின்னாலே இழுக்கிறாண்டா - ஜாதி சொல்லி
பின்னாலே இழுக்கிறாண்டா
எத்தனையோ காரணத்தில் இது ஒரு காரணமாய்...
படிப்பையும் விரட்டுதடா பிள்ளைகளைப்
பள்ளி விட்டு விரட்டுதடா
எல்லாரும் ஒண்ணு சேருங்க - பிள்ளைகளை
பள்ளிக்கூடம் கொண்டு சேருங்க
ஒரு முகத்தில் இரண்டு கண்ணு
பூமியிலே ஆணும் பெண்ணும்
பள்ளிக்கூடம் போக வேணுங்க - தேசமெல்லாம்
பொன்னுலகம் ஆக வேணுங்க
எல்லோரும் ஒண்ணு சேருங்க - பிள்ளைகளை
பள்ளிக்கூடம் கொண்டு சேருங்க (மரிக்கொழுந்து)

❋❋❋❋❋

## அறிவொளி ஆசிரியர்க்கு...

* பாடம் நடத்த ஆரம்பித்திருப்பீர்கள். உங்கள் அனுபவங்களை எங்களுக்கு எழுதுங்கள்.
* பாடம் நடத்தும் போது எந்த சந்தேகம் வந்தாலும் உடனே அருகிலுள்ள முதன்மைப் பயிற்சியாளர்களையோ அல்லது கருத்தாளர்களையோ அணுகிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
* மையம் நடத்துவதற்கு ஏதாவது சிரமம் இருப்பின் உதவித் திட்ட / திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் இவர்களை அணுகி உதவி கேளுங்கள். கட்டாயம் கிடைக்கும்.
* நம்பிக்கையுடன் பணி தொடருங்கள். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

தஞ்சாவூர் மாவட்டத்தை முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டம் ஆக்குவோம்.

நன்றி..நன்றி... நன்றி... நன்றி... நன்றி

**தமிழ்நாடு அறிவியல் இயக்கம், மாநில பள்ளி சாராக் கல்விக் கருவூலம் மற்றும் அறிவொளி மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆகியோர்க்கு நன்றி.**

தஞ்சாவூர் கூட்டுறவு அச்சகம், தஞ்சாவூர். போன் 21515